GOKULAM

நவம்பர் 2009 ❖ விலை ரூ.8/- ❖ 80 பக்கங்கள்

கோகுலம்

குழந்தைகளின் குதூகலம்!



ரூ.500/- இரண்டாம் பரிசு பெறும் சிறுகதை!

சுடாத சூரியன்!

பாரிஸின் அடையாளம்!

வந்தாச்சு மழைக்காலம்!

கோகுலம் சிறுவர் சங்கம்

உறுப்பினர்கள்


1301

1302

1303

1304

1305

1306

1307

1308

1309

1310

1311

1312

1313

1314

1315


1316

1317

1318

1319

1320

1321

1322

1323

1324

1325

தொடர்ச்சி 3 ஆம் அட்டையில்...

கோகுலம்

கல்கி

நவம்பர் 2009 மலர் : 27 இதழ் : 10

உயிர்களிடத்தில் அன்பு வேணும் – தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும் – பாரதியார்



ஆனந்தம் ததும்புகின்ற பருவம் என்பது பள்ளிப் பருவம்! எல்லாமே விளையாட்டாக பரிணமிக்கின்ற பருவம் இது! எல்லாவற்றையும் புரிந்து கொள்ள விழைகின்ற பருவமும் இதுதான்.

நீங்களும்-ரோஜாக்களே!



ஆர்வம், துணிச்சல், உற்சாகம், இரக்கம், உதவும் மனப்பான்மை... என்று அனைவரையும் உயர்வை நோக்கி உந்துகின்ற காலம், பள்ளியில் பயிலும் காலம்!

அதை மிகச்சரியாகப் புரிந்து கொள்ளும் மாணவர்கள், தாங்களும் ரோஜாக்களாக மலர்கிறார்கள். ரோஜாக்கள் தங்கள் இருப்பால். அந்த இடத்தையே மலர்ச்சி பெறச் செய்கின்றன; மணக்க வைக்கின்றன. அதைப் போன்றே குழந்தைகளும் துக்கம், வருத்தம் கவலை என்று முளைக்கும் களைகளை தங்களுடைய இருப்பால் கலைந்தோட வைக்கின்றனர்.

அந்தக் குழந்தைகள் மீதான பற்றின் வெளிப்பாடாகவே, ரோஜாவை அணிந்திருந்தார் பண்டித ஜவஹர்லால் நேரு. அந்த அன்பின் காரணமாகவே அவர் பிறந்த நாள் உங்களுக்கான தினமாகக் கொண்டாடப்படுகிறது.

அன்புடன்
கோகு

பாம்புப்

சுகுணா



மாற்றலாகி வந்திருக்கும் உயரதிகாரியைச் சந்திக்கக் கிளம்பிக் கொண்டிருந்தான் சாரதி. அப்போது உள்ளே நுழைந்தார் தமிழாசிரியரான சொக்கலிங்கனார்; அவனது அடுத்த வீட்டுக்காரர்.

''ஐயா, வாங்க... வாங்க..''

அவன் அழைத்த வேகத்திலேயே வந்தது அவர் பதில்:

''வாங்க வாங்கக் கடன்தான்!''

புன்னகைத்தபடியே, ஒரு நாற்காலியை நகர்த்திய சாரதி, ''சொல்லுங்க ஐயா, நான் என்ன பண்ணட்டும்?'' என்றான்.

''அதிருக்கட்டும். கையில என்ன? பாம்பு மாதிரி இருக்கு?''

''என்ன விளையாட றீங்களா? பாம்பை யாராவது கையில வைச்சிருப்பாங்களா?''

''என்னப்பா இது? சிவனோட தலையில இருக்கிறது பாம்புதான். திருமால் படுத்திருகிறது பாம்பு மேலதான். பிள்ளையாரோட தொப்பையை சுற்றி இருக்கிறது பாம்புதான்...''

''அது சரி. அதெல்லாம் சாமிங்க. நம்மால ஆகுமா?''


''என்னப்பா இது? சந்தேகம் வந்தா செயல்பட முடியுமா? பாம்பாட்டிகளை நீ பார்த்ததில்லே?''

''அது அவனுக்குத் தொழில். ஆனா, நான் கையில வைச்சிருக்குறது பாம்பு இல்லையே. வெறும் எலுமிச்சைப் பழம்தானே?''

''அதைத்தானே நானும் சொன்னேன்.''

அதைக் கேட்ட சாரதி வியந்து போனான். புலவரோ குறும்பாகச் சிரித்

> பெரியவிடமே சேரும் ; பித்தர்முடி ஏறும்:
> அரியுண்ணும்; உப்பு மேலாடும் - எரிகுணமாம்
> தேம்பொழியும் சோலைத் திருமலைராயன் வரையில்
> பாம்பும் எலுமிச்சம் பழம்.
>
> -காளமேகப் புலவர்



துக் கொண்டிருந்தார்.

''புரியலை இல்லியா'' என்ற ஆசிரியர், தொடர்ந்து பேசினார் :

''எலுமிச்சைப் பழத்தைப் பார்த்து பாம்புன்னு சொல்றாரே, இந்த ஆளுக்கு என்ன ஆச்சுன்னு தானே பார்க்கிறே? நான் சொல்லலை. என்னைவிடப் பெரிய ஆளு சொல்லிருக்கார். ரெண்டும் ஒண்ணுதான். எப்படின்னு தெரியுமா?''

சாரதி ஆர்வமாக கவனிக்க, அடுத்துப் பேசினார் ஆசிரியர் :

''பெரியவங்களைப் பார்க்கப் போகும் போது எடுத்துட்டுப் போறது எலுமிச்சை தான். பித்தத்தைக் குறைக்க தலையிலே

பழம்!?



தேய்க்கிறதும் அதுதான். ஊறுகாய் போட அரிந்து, உப்பில் போட்டு வைக்கிறோம். தவறிப் போய் கண்ணுல பட்டா பயங்கரமா எரியும். இதெல்லாம் எலுமிச்சையோட குணம்.

பாம்போ, விஷத்தைக் கொண்டிருக்கும். பித்தன் என்று பாடப்படும் சிவபிரானின், திருமுடியில் காட்சிதரும். காற்றை (அரி) விழுங்கி உடலை உப்ப (பருக்க) வைக்கும். படத்தை உயர்த்தி ஆடும். கோபம் கொள் ளும் (எரிகுணம்) குணமுடையது. இதனால் பாம்பும் எலுமிச்சம் பழமும் ஒண்ணுதானே?!''

தமிழாசிரியர் கேள்வியால் அசந்து போன சாரதி, வியப்போடு கேட்டான் :

''யார் பாடின பாட்டு இது?''

''வேற யாரு? ஆசுகவியா அதிரடி காட்டின காளமேகம்தான்!''

கல்கி
தரமான வெளியீடு
தரம் நிரந்தரம்

கோகுலம்

பாரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பாரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர்:
லக்ஷ்மி நடராஜன்

ஆசிரியர் : சீதா ரவி
வடிவமைப்பு :
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன்,
பா.கோபால்

தொலைபேசி : 044 - 4343 8888
தொலைநகல் : 044 - 4343 8899

ஆசிரியர் குழு :
044 - 4343 8822
tamilgokulam@kalkiweekly.com

விளம்பரப் பிரிவு :
044 - 4343 8811
marketing@kalkiweekly.com

சந்தா பிரிவு :
044 - 4343 8833
subscription@kalkiweekly.com

விற்பனை பிரிவு :
044 - 4343 8844
sales@kalkiweekly.com

இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

இணையதளத்தில்...
வாங்கி, வாசித்து, மகிழ...
www.sangapalagal.com

சந்தா விவரம் (ஒரு வருடம்) :
உள்நாடு : ரூ.96/-
வெளிநாடு : ரூ.1000/-

கல்கி பில்டிங்க்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

குழந்தைகளின் குதூகலம்!

நிழல் சொல்லும்

சந்தோஷ் டென்னிஸ் பயிற்சியை முடித்துவிட்டு வீட்டுக்குத் திரும்பினான். உள்ளே நுழைந்ததும், "ஊரிலிருந்து அரவிந்த் அண்ணா வந்திருக்கான்" என்று அம்மா சொல்லி முடிப்பதற்குள் "இப்ப அண்ணா எங்கே?" என்று உற்சாகத்தில் பரபரத்தான். "மேல் ரூமில் ரெஸ்ட் எடுத்திட்டிருக்கான்" என்று பதில் வர, மேலே ஓடினான் சந்தோஷ்.

சந்தோஷின் பெரியம்மா மகன்தான் அரவிந்த். சந்தோஷ் ஏழாம் வகுப்பு படிக்கிறான். அரவிந்த் பொறியியல் கல்லூரியில் இறுதியாண்டு படிக்கிறான். சந்தோஷுக்கு அரவிந்த் அண்ணாவை ரொம்பப் பிடிக்கும். அவனுக்குப் படிப்பில், விளையாட்டில், உடை, உணவுப் பழக்க வழக்கங்களில் என அனைத்திலும் 'அரவிந்த்' தான் 'ரோல் மாடல்'. அந்த ஆண்டு சந்தோஷின் பள்ளியில் நடைபெற்ற அறிவியல் கண்காட்சியில், அவன்தான் முதல் பரிசு வென்றான். அதற்குக் காரணம் அரவிந்த்தான்.

மேலே ஓடிச் சென்று சந்தோஷ் அண்ணாவைப் பார்த்தான். "வாங்க, வருங்கால ஃபெடரரே! டென்னிஸ் பிராக்டீஸுக்குப் போகறியாமே? முழு ஆண்டுப் பரீட்சையெல்லாம் எப்படி எழுதியிருக்கே? லீவுல உபயோகமா ஏதாவது ஸம்மர் கிளாஸ் போகறது ரொம்ப நல்ல பழக்கம். இப்படியே தொடர்ந்து நிறைய திறமைகளை வளர்த்துக்கணும். சரியா?" என்றான் அரவிந்த். "ஓ.கே.ண்ணா! எங்க ஸ்கூல் அறிவியல் கண்காட்சிக்காக நீங்க எனக்கு விண்ட் மில் செய்ய உதவி பண்ணீங்களே? அதுல நான் முதல் பரிசு வாங்கியிருக்கேன். அடுத்து மாவட்ட அளவில் நடக்கற போட்டியில் கலந்துக்கப் போறேன். ரொம்ப தேங்க்ஸ் அண்ணா!" என்றான் சந்தோஷ்.

இதற்குள் மதிய உணவு தயாராகி விட, இருவரும் சாப்பிடச் சென்றனர். அன்று மாலை அரவிந்த் சந்தோஷை வெளியே கூட்டிச் சென்று ஐஸ்கிரீம், பொம்மைகளை வாங்கித் தந்தான்.

மறுநாள், அரவிந்தே சந்தோஷை அவனது பைக்கில் டென்னிஸ் வகுப்பிற்கு அழைத்துச் சென்றான். சந்தோஷ் பெருமையாகத் தன் நண்பர்களிடம் அரவிந்தை அறிமுகப்



படுத்தினான்.

குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா நினைவுச்சிறுகதைப் போட்டியில் இரண்டாம் பரிசு ரூ.500/- பெறும் சிறுகதை

ஒருநாள், டென்னிஸ் வகுப்பு முடிந்து திரும்பிய சந்தோஷ் சோகமாக இருந்தான். அரவிந்த் அதற்கான காரணத்தைக் கேட்டபோது, சந்தோஷ் சொன்னான். "இன்னிக்கு எனக்கும் வருணுக்கும் நடந்த மேட்சில் நான் தோத்துட்டேன்." குரலில் வருத்தம்! "அதுக்கா இவ்வளவு கவலைப்படறே?" என்று அரவிந்த் கேட்க, "நேத்தும்கூட நானும் அவனும் விளையாடினோம். இரண்டு மணி நேரம் ஆட்டம் கடினமா இருந்தது. கடைசியில் நான் ஜெயிச்சுட்டேன். இன்னிக்கு ஒன்றரை மணி நேரம் விளையாடினோம். ஆனா நான் தோத்துட்டேன். அவன் அவ்வளவா நல்லா விளையாடமாட்டான். அவன் கிட்டயே தோத்துட்டேனே!" என்று புலம்பினான்.

பாடம்!



அவனுக்கு ஆறுதல் சொன்ன அரவிந்த், மொட்டை மாடிக்கு அவனை அழைத்துச் சென்றான். மதிய வேளையென்பதால் சூரியன் நடு வானில் தகித்துக் கொண்டிருந்தது. அரவிந்த் சந்தோஷிடம் ஒரு தொட்டியைக் காண்பித்து, ஓடிச் சென்று அதைத் தொட்டு விட்டுத் திரும்பி வருமாறு கூறினான். சந்தோஷுக்கு ஒன்றும் புரியவில்லை. ஆனாலும், அண்ணன் சொன்னதைத் தட்டாமல் செய்தான். அரவிந்த் "இப்போது உன் நிழல் கிட்டதட்ட உன்னை நெருங்கியே வந்ததல்லவா?" என்று கேட்டான். சந்தோஷ் ஆமாமென்று தலையாட்ட அவனைக் கீழே அழைத்துச் சென்று விட்டான்.


பிறகு, மீண்டும் மாலை சந்தோஷை மாடிக்கு அழைத்துச் சென்று ஓடச் சொன்னான். "இப்போது உன் நிழல் எப்படியிருந்தது?" என்று கேட்டான். "எனக்கு முன்னே சென்றது" என்று சந்தோஷ் பதில் கூற, "சரி, கீழே போகலாம், வா"



யாழினி அன்புமணி,
பத்தாம் வகுப்பு, உ.எண்: 119,
கலைமகள் கல்வி நிலையம்
மெட்ரிக் பள்ளி, ஈரோடு.

என்றான்.

"எனக்கு ஒன்றும் புரிய வில்லையே, அண்ணா" என்று சந்தோஷ் கேட்க, "நாளை காலையில் எல் லாம் புரியும்" என்று சஸ்பென்ஸ் வைத்தான் அரவிந்த்.



"இந்த சூரியன்தான் உன்மனம்; உன் நிழல்தான் வருண் !"

மறுநாள் காலையும் சந்தோஷை மாடிக்கு அழைத்து ஓடச் சொன்னான் அரவிந்த். இப்போது அவன் ஓடியபோது அவனது நிழல் அவனுக்குப் பின்னே வந்தது. அரவிந்த் சொன்னான். "இந்த சூரியன்தான் உன் மனம். உன் நிழல்தான் வருண். நேற்று மதியம் சூரியன் உச்சத்தில் இருந்தது. நீயும் சரியான மனப்பான்மையில் இருந்தாய். உன் நிழல் உன்னை நெருங்கியே வந்த போதிலும் உன்னை முந்த முடியவில்லை. அது போன்றே, வருண் இரண்டு மணி நேரம் உனக்குக் கடுமையான போட்டி அளித்தபோதிலும் நீ வென்றாய். ஆனால், நேற்று மாலை சூரியன் கீழே இறங்கிவிட்டது. அதாவது, நீ வருணைக் குறைத்து மதிப்பிட்டு அகந்தை கொண்டுவிட்டாய். அதனால் நேற்று உன் நிழல் போன்றே வருணும் உன்னை முந்திவிட்டான். இன்று சூரியன் மீண்டும் மேலே எழும்பி வருகிறது. இது இன்று நீ அகந்தையை விட்டு கடும் முயற்சி செய். நிச்சயம் வெல்வாய்!"

சந்தோஷ் தன் அண்ணனை மகிழ்ச்சி யோடு கட்டிக் கொண்டான்.

●

விடையைச் சொல்; பரிசை வெல் - 26ல் கலந்து கொண்டு சரியான விடை களை நூற்றுக்கணக் கானோர் அனுப்பி இருந்தனர். ஆகவே, பரிசுத் தொகையான ஆயிரம் ரூபாயை குலுக்கல் மூலம் பத்து பேருக்கு தலா ரூ.100/- வீதம் வழங்குகிறோம்.



சரியான விடைகள் :

1) மைட்ஸ், 2) வாலன்டினா டெரஸ்கோவா, 3) தேக்கு, 4) 13, 5) மைக்கேல் ஃபாரடே

பரிசு பெறுவோர்

1.வி.விக்னேஸ்ராஜா, கோவில்பட்டி, 2.ஜெ.ஹரீஷ்குமார், பாண்டமங்கலம், 3.த.தமயந்தி, கீரமங்கலம், 4.இரா.ப்ரீத்தி, தோப்புத்துறை, 5.டி.எஸ்.ஷிபா சனோபர் பாத்திமா, பள்ளப்பட்டி, 6.ஆர்.ஜனனி, திருச்சி, 7.எஸ்.புவனேஸ்வரன், பாலக்காடு, 8.எம்.அபிநயா, ஐதராபாத், 9.பி.யாழினி, அருப்புக்கோட்டை, 10.வி.மதுமிதா, கோழிக்கோடு

டியர் குட்டீஸ் ...



உங்கள் கவனத்துக்கு!

● சிறுவர் சங்க உறுப்பினராக குறைந்த பட்சம் ஐந்து வயதாகியிருக்க வேண்டும்.

● பட்டியல் பகுதியில் கொடுக்கப் பட்டுள்ள கூப்பனை நிரப்பி, புகைப் படத்தை இணைத்து அனுப் புங்கள். (ஜெராக்ஸ் எடுப்பதைத் தவிர்க்கவும்.)

● முதல் வகுப்பு முதல் மேல் நிலைப் பள்ளி வரை பயிலும் அனைவரும் உறுப்பினர் சங்கத்தில் இடம் பெற முடியும்.

● இதற்கு எந்தக் கட்டணமும் கிடையாது.

● நீங்கள் உறுப்பினர் எனில், படைப்புகளை அனுப்பும்போது உங் களுக்கான உறுப்பினர் எண்ணைக் குறிப்பிட மறக்காதீர்கள்.

● ஏற்கெனவே உறுப்பினர் சங் கத்தில் இடம் பெற்றவர்கள் மீண்டும் சிறுவர் சங்கக் கூப்பனை அனுப்ப வேண்டாம்.


● உறுப்பினர் அல்லாதவரும் தங்கள் படைப்புகளை எழுதி அனுப் பலாம். சில குறிப்பிட்ட போட்டிகளில், உறுப்பினர்கள் மட்டுமே கலந்து கொள்ள முடியும்.

● மாணவர்கள் தங்கள் படைப்புகளின் பின்பக்கம், பெயர், வகுப்பு, பள்ளி, ஊர், உறுப்பினர் எண் ஆகியவற்றையும், வீட்டு முகவரியையும் தெளிவாக எழுதி அனுப்பவும்.

● பிறர் எழுதி வெளியான கதை, கட்டுரை, கவிதை... போன்றவற்றை, மீண்டும் உங்கள் பெயரில் எழுதி அனுப்பாதீர்கள். இது மிகத் தவறு.

● நீங்கள் அனுப்பும் கதை, கட்டுரை, கவிதை போன்றவை உங்கள் சொந்தப் படைப்பாக இருக்க வேண்டும் என்பது மிக முக்கியம்.

ஆசிரியர், கோகுலம்
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 32







* பள்ளி முதல்வர் பெரிய நாயகி

மாணவர்களின் முன்னேற்றத்துக்குக் காரணம் பெற்றோர்களா? ஆசிரியர்களா? - இது பட்டிமன்ற தலைப்பு. கோவை, பாரதி மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி மாணவர்கள் விவாதிக்க, தமிழாசிரியர் நீ.ரா.சிந்தன் நடுவராக வழி நடத்தினார்:

ஜீஜாபாயும்



* பரத்

நடுவர் : 'எழுத்தறி வித்தவன் இறைவன்' என்பது முதுமொழி. எழுத்து என்பது எண்ணத்தோடு கூடியது. எண்ணங்களை நேர்ப்படுத்திக் கொண்டால்தான், எழுத்தும் நேர்ப்படும். அதைத்தான், 'உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்' என்றார் மகாகவி பாரதி. அந்த எண்ணத்தை முறைப்படுத்தி, 'மாணவர்கள் முன்னேற்றமடைய பெரிதும் காரணமாக இருப்பது பெற்றோர்களே; இல்லை, ஆசிரியர்களே' என்று, இரு அணிகளாக வாதிட வதிருக்கிறார்கள் மாணவ மணிகள். அவர்கள் தங்கள் கருத்தை இப்போது பதிவு செய்வார்கள்.



* ஜெ. ஸ்ரீராம்

ஜெ. ஸ்ரீராம் *(பன்னிரண்டாம் வகுப்பு)* : அறிவை வளர்ப்பவர்கள் ஆசிரியர்கள்தான். அறிவு என்பது, பாடத் திட்டத்தில் உள்ள பகுதி மட்டுமல்ல; அதைக் கடந்து ஒழுக்கம், நடந்து கொள்ள வேண்டிய முறை, பேசும் தன்மை... இப்படி பல விஷயங்கள் சேர்ந்தது. பாடத்தோடு இவற்றையும் கற்பித்து எங்கள் எதிர்காலத்தை உருவாக்குவதால் ஆசிரியர்களே முதன்மையானவர்கள்.

பரத் *(பன்னிரண்டாம் வகுப்பு)* : பள்ளி நேரத்துக்குப் பின்பு, ஆசிரியரின் தொடர்பு மாணவனுக்கு இருக்காது. எப்போதும் மாணவனின் மனநலம், உடல்நலம் இரண்டிலும் கவனம் செலுத்தும் பெற்றோர்கள்தான் முக்கியமானவர்கள் என்பதைச் சொல்லவும் வேண்டுமா?

* முத்துராமன்



முத்துராமன் *(பன்னிரண்டாம் வகுப்பு)* : எல்லாப் பெற்றோரும் படித்தவர்கள்தானே? கல்வியை பெற்றோர்கள் போதிக்க முடியாதா? நிச்சயமாக முடியும். ஆனால்; கல்வியோடு, நல்ல பண்புகளையும், நடத்தையையும் பெறத்தான் ஆசிரியர்களிடம் தங்கள் குழந்தைகளை

அனுப்புகிறார்கள்.

விஜயலட்சுமி *(பத்தாம் வகுப்பு)* : ஆசிரியர்கள் ஆணிவேர் என்றால் அதை அரவணைப்பாலும், பரிவினாலும் வளர்த்துக் காக்கும் பெற்றோர்கள் சல்லிவேர்கள். பெற்றோர்களின் ஆதரவு அமையவில்லை என்றால், ஆசிரியர் என்ன கற்பித்தாலும் அது பயனற்றுப் போய்விடும்.

ஸ்ரீதேவி *(பத்தாம் வகுப்பு)* : கரடுமுரடான கருங்கல்லை அழகான சிலையாக வடிக்கிறான் சிற்பி. சிற்பி மட்டுமே செதுக்க முடியும். நம்மை அறிவு மிக்கவர்களாக ஆக்கும் சிற்பிகள் ஆசிரியர்கள்தான்.



* விஜயலட்சுமி

விகாஷ் கிருஷ்ணா *(பத்தாம் வகுப்பு)* : 'தந்தை மகற்காற்றும் உதவி, அவையத்து முந்தியிருப்பச் செயல்' என்பார் வள்ளுவர். அந்த வகையில், மகன் பேரும் புகழும் பெற வேண்டும்; அனைவராலும் மதிக்கப்பட வேண்டும். சிறந்தவனாக வேண்டும் என்கிற அக்கறையும், கவனமும் பெற்றோர்களிடம்தான் அதிகமிருக்கும். அதனால், மாணவனின் முன்னேற்றத்துக்குப் பெற்றோர்களே காரணம் என்பதே பொருத்தமானது.



* ஸ்ரீதேவி

அரிஸ்டாட்டிலும்!



* விகாஷ் கிருஷ்ணா

அனுஷா *(பன்னிரண்டாம் வகுப்பு)* : தன்மீது வந்து அமரும் பறவைகளுக்கு நிழல் தருகிறது; இடம் தருகிறது; பழம் தருகிறது மரம். அதைச் சுமையாகவோ, வெறுப்பாகவோ அது கருதுவதில்லை. அந்த மரத்தைப் போன்றே, ஆசிரியர்கள் திகழ்கிறார்கள். அதனால், ஆசிரியர்களே, மாணவர்கள் முன்னேறக் காரணம்.





பன்னிரண்டு வயதுக்குள் சுமார் ஐம்பதுக்கும் மேற்பட்ட கோப்பைகளை பெற்றிருக்கிறார் நந்தினி. அத்தனையும் அவர் வரைந்த ஓவியங்களுக்காக! பள்ளி, மாவட்டம், மாநிலம், அகில இந்திய அளவில் என்று பல சான்றிதழ்கள்; கோப்பைகள் என்று வென்ற நந்தினி, சமீபத்தில் யுனெஸ்கோ இன்டர்நேஷனல் விருதும் பெற்றிருக்கிறார். கோவை, பாரதி மெட்ரிகுலேஷன் பள்ளி மாணவியான இவர், தனது ரோல்மாடல் ரவிவர்மா என்கிறார்! மழையை வரவேற்கும், அட்டையிலுள்ள படமும் அவர் வரைந்ததுதான். *(மழைக்கால நோய்கள் குறித்த டாக்டரின் கட்டுரை 76ம் பக்கம்)*



வந்தாச்சு மழைக்காலம்!



* அனுஷா

சாஹினா *(ஒன்பதாம் வகுப்பு)* : 'கற்பது, எதிர்கால நன்மைக்கே' என்று உணரச் செய்பவர்கள் பெற்றோர்கள். தவிர, மனரீதியாக மாணவனுக்குத் துணிவும், ஆதரவும் கொடுப்பதும் அவர்கள்தான். அதனால், பெற்றோர்களே, முன்னேற்றத்தின் முதல் காரணிகள்.

ஸ்ரீலட்சுமி *(பன்னிரண்டாம் வகுப்பு)* : தண்ணீர், காற்று, நிலம், தீ, ஆகாயம் போன்றவற்றுக்கு யாரிடமும் எந்தப் பாகுபாடும் இல்லை. ஆசிரியர்களும் அப்படிப்பட்டவர்கள்தான். அவர்கள் ஆறாவது பூதம்! மாணவர்கள் அனைவரையும் சமமாகப் பாவித்து, பாடுபடும் ஆசிரியர்கள்தான் மாணவர்களின் முன்னேற்றத்துக்குக் காரணம்.

* ஸ்ரீலட்சுமி



அனிதா *(பன்னிரண்டாம் வகுப்பு)* : மாணவர்களின் நேரத்தைப் பயனுள்ளதாக்கி, நம்பிக்கையூட்டி, அவர்களுக்காகக் கண் விழித்து, உழைத்து, அவர்களையே நெஞ்சில் நினைத்திருக்கும் பெற்றோர்கள்தான் முதன்மையான காரணம்.



* சாஹினா

ராகவி *(பன்னிரண்டாம் வகுப்பு)* : நல்ல மாணவனாக, சிறந்த குடிமகனாக ஒரு மாணவனை ஆக்குவது ஆசிரியர்கள். மாணவனிடம் உள்ள குறைகளை செதுக்கி, நிறைகளை அதிகப்படுத்தி, பழக்கங்களை நேர்ப்படுத்தி, எதிர்காலம் குறித்து அக்கறையுள்ளவனாக, லட்சியத்தை முன்னிருத்துபவனாக, அவனை உருவாக்குபவர்கள் ஆசிரியர்களே.

லாவண்யா *(பன்னிரண்டாம் வகுப்பு)* : சத்ரபதி சிவாஜியை அனைவரும் அறிவோம். அவருடைய ஆசிரியர் யார்? மகாத்மா காந்தியை நமக்குத் தெரியும். அவருடைய ஆசிரியர் யார்? ஆனால்,



* அனிதா

ஜீஜாபாயையும், புத்லிபாயையும் நாம் அறிவோம். காரணம், பெற்றோர்களின் அரவணைப்பும், ஆதரவும் கொடுக்கின்ற பெரும் வெற்றிகளை, சாதனைகளை வேறு யாராலும் அளிக்க முடியாது.



நடுவர் நீ.ரா.சிந்தன்

சிரஞ்சீவி *(பதினொராம் வகுப்பு)* : பெரும் வெற்றி பெற்ற மாணவர்களிடம் ஒரு கருத்துக் கணிப்பு நடத்துங்கள். அவர்களின் பின்னணியில் ஒரு ஆசிரியர் இருப்பது புரியும். மாணவனின் பலவீனத்தைக் களைந்து, திறமைகளை வளர்த்து, வெற்றிகளை வசப்படச் செய்வது ஆசிரியப் பெருமக்கள்தான்.

* ராகவி



அனிருத் *(பத்தாம் வகுப்பு)* : ஆசிரியர்கள் தங்கள் அக்கறையாலேயே, கடுமை காட்டி, அதனால், படிப்பின் மீதே சலிப்பும், தளர்வும் ஏற்படுத்தி விடுவர். மாறாக, பெற்றோர்கள் 'உன்னால் முடியும்' என்று துணிவூட்டுவார்கள். தன் குழந்தையின் நிலையோடு பொருந்தி வருவது பெற்றோருக்குச் சுலபம்.

நடுவர் தீர்ப்பு : மாணவர்களின் முன்னேற்றத்துக்கு, பெற்றோர்-ஆசிரியர் இருவருமே காரணம் என்பதை, இதுவரையில் பேசிய இரண்டு அணியினரும் உணர்த்தினார்கள். சரிதான்; ஆனால், பெரிதும் காரணம் யார்? அது புரிந்தால், தீர்ப்பு சுலபமாகிவிடும். வெறும் பாடத்தை மட்டும் ஆசிரியர் நடத்தவில்லை. பாடத்தைத் தவிர, வாழ்வுக்கு ஆதாரமாகவுள்ள பிறவற்றையும் காட்டி, 'அவற்றிடமும் நீ கற்றுக் கொள்ள வேண்டிய விஷயங்கள் உள்ளன' என்று அறிவுறுத்துகிறார்.


* லாவண்யா



கல்வி என்பது பள்ளியோடு முடியவில்லை. நீ பார்க்கும் ஒவ்வொன்றிலிருந்தும் கற்க வேண்டியவை உண்டு என உணர்த்துகிறார். பெற்றோர்கள், மாணவர்களின் பிழைகளை, குற்றங்களைப் பொறுத்துக் கொள்வார்கள். ஆசிரியர்கள், பொறுத்துக் கொள்வது மட்டுமல்ல; மீண்டும் அந்தப் பிழை நடக்காத வண்ணம் அவனைத் திருத்துகிறார்கள். இந்திய அளவில் ஜீஜாபாயும் புத்லிபாயும் தெரிந்திருக்கலாம். ஆனால், உலக அளவில் நிலைத்த புகழ்பெற்றவர்கள் அரிஸ்டாட்டில், துரோணர்... என்று பலர். அலெக்சாண்டர் என்று சொன்னால் அரிஸ்டாட்டில் நினைவு வரும். அர்ஜுனன் என்று சொன்னால், துரோணரின் நினைவுவரும். அந்த வகையில், மாணவர்கள் முன்னேற்றத்துக்குப் பெரிதும் காரணம், ஆசிரியர்களே என்று சொல்லி, தீர்ப்பளிக்கிறேன். ●

இந்திய அளவில் ஜீஜாபாயும், புத்லிபாயும் தெரிந்திருக்கலாம். ஆனால் உலக அளவில் நிலைத்த புகழ்பெற்றவர்கள் அரிஸ்டாட்டில், துரோணர்... என்று பலர்!

* சிரஞ்சீவி




* அனிருத்



தொகுப்பு: ஆர். பாலா

வண்ணப்படங்கள்: சின்னராசு

பூங்காவில் இரண்டு பையன்கள் உட்கார்ந்திருக்கிறார்கள். வயதான தாத்தா ஒருவர் அவர்களை நெருங்குகிறார், ''தம்பி, டைம் என்னப்பா?''



முதல் பையன் வாட்சைப் பார்க்கிறான், ''மணி 4:10'' என்கிறான்.

உடனே, இரண்டாவது பையனும் தன்னுடைய கைக்கடிகாரத்தைப் பார்க்கிறான், ''ஆமா, மணி 4:10தான்'' என்று உறுதிப் படுத்துகிறான்.

பெரியவருக்குத் திருப்தி. அவர்களுக்கு நன்றி சொல்லிவிட்டுக் கிளம்புகிறார்.

இப்போது, அந்தப் பக்கமாக ஒரு பாட்டியம்மா வருகிறார், ''உஸ், அப்பப்பா, இன்னிக்கு ரொம்ப வெயிலா இருக்கே'' என்று முந்தானையால் நெற்றியைத் துடைத்துக்கொள்கிறார்.

அவர் இப்படிச் சொன்னதும், முதல் பையன் தன்னுடைய பாக்கெட்டிலிருந்து ஒரு கருவியை எடுத்து உற்றுப் பார்க்கிறான், ''ஆமா பாட்டி, இன்னிக்கு 40 டிகிரி'' என்று சொல்கிறான்.

உடனே, இரண்டாவது பையன் இன்னொரு கருவியை எடுக்கிறான். அதைக் கவனமாகப் பார்த்துவிட்டு, ''இன்னிக்கு வெப்பநிலை 104 டிகிரி'' என்கிறான்.

இதென்ன கூத்து? முதலில் அந்தப் பெரியவர் மணி கேட்டபோது, இரண்டு பேரும் ஒரேமாதிரி 4:10 என்று சொன்னார்கள். ஆனால் இப்போது வெப்பநிலை விஷயத்தில் ஆளுக்கு ஒரு பதில் சொல்கிறார்களே, இவர்களில் யார் சொல்வது சரி?...

இரண்டுமே சரிதான்!

உலகம்முழுக்க, வெப்பநிலையைக் குறிப்பிடுவதற்குப் பல விதமான அளவைகளைப் பயன்படுத்துகிறார்கள். அவற்றில் மிகப் பிரபலமான இரண்டு - ஃபாரன்ஹீட் மற்றும் செல்சியஸ்.

ஜெர்மனியைச்சேர்ந்த டேனியல் காப்ரியேல் ஃபாரன்ஹீட் என்பவர், பதினெட்டாம் நூற்றாண்டில் ஒரு தெர்மாமீட்டரைக் கண்டுபிடித்தார். இதன்மூலம் வெப்பநிலையை மிகவும் சுலபமாக, துல்லியமாக அளவிடமுடிந்தது.

என். சொக்கன்



சில வருடங்கள் கழித்து, ஸ்வீடனைச் சேர்ந்த ஆண்ட்ரஸ் செல்சியஸ் என்பவர் இன்னொரு தெர்மாமீட்டரை அறிமுகப்படுத்தினார். இதுவும் வெப்பநிலையைக் கச்சிதமாக அடையாளம் காட்டியது.

ஆனால் ஒரே ஒரு பிரச்னை, ஃபாரன்ஹீட் அறிமுகப்படுத்திய வெப்ப அளவுகளும், செல்சியஸ் அறிமுகப்படுத்திய வெப்ப அளவுகளும் ஒன்றாக இல்லை.

பூங்காவில் அந்த முதல் பையன் சொன்ன '40 டிகிரி' என்பது, '40 டிகிரி செல்சியஸ்', அடுத்த பையன் சொன்னது, '104 டிகிரி ஃபாரன்ஹீட்', இரண்டுமே சரிதான்!

இதுமாதிரி குழப்பத்தைத் தவிர்க்க வேண்டுமென்றால், வெறுமனே 'டிகிரி' என்று சொன்னால் போதாது, 'டிகிரி செல்சியஸ்' அல்லது 'டிகிரி ஃபாரன்ஹீட்' என்று தெளிவாகச் சொல்லவேண்டும்.



இதுபற்றி ஒரு வேடிக்கையான கதைகூட உண்டு. எழுதியவர் புகழ் பெற்ற ஆங்கில எழுத்தாளர் எர்னஸ்ட் ஹெமிங்வே.

ஒரு பையன், படுக்கையில் ரொம்பச் சோகமாக உட்கார்ந்திருக்கிறான். அவன் கண்களில் கண்ணீர் ததும்பிக் கொண்டிருக்கிறது.

அப்போது, அந்தப் பையனுடைய அப்பா அவனைப் பார்க்க வருகிறார், ''உள்ளே வராதீங்க'' என்று கத்துகிறான் அவன்.

''ஏன்ப்பா? என்ன ஆச்சு? நான் ஏன் உள்ளே வரக்கூடாது?''

''நீங்க உள்ளே வந்தா, என்னோட காய்ச்சல் உங்களுக்கும் தொத்திக்கும்'' என்கிறான் அந்தப் பையன். ''நான் இப்போ சாகப்போறேன்!''

''சேச்சே, நீ எதுக்குச் சாகணும்? சும்மா உளறாதே'' என்கிறார் அவனுடைய அப்பா.

''இல்லப்பா, டாக்டர் இப்பதான் சொன்னார், என்னோட உடம்பு வெப்பநிலை 102 டிகிரியாமே!''

''ஆமா, அதனால என்ன?''

''நான் புக்ல படிச்சிருக்கேன், ஒருத்தரோட உடம்பு டெம்பரேச்சர் 45 டிகிரி தாண்டினா அவங்க செத்துப்போயிடுவாங்களாம், நான் 102 டிகிரிக்கே போய்ட்டேன், அவ்ளோதான், என் கதை முடியப்போகுது.''


அவன் இப்படிச் சொன்னதும்,

அப்பா விழுந்து விழுந்து சிரிக்கிறார், "அட மக்குப் பயலே" என்று அவனைக் கிண்டலடிக்கிறார்.

அந்தப் பையனுக்குக் குழப்பம் "ஏம்ப்பா சிரிக்கறீங்க?" என்று அப்பாவியாக விசாரிக்கிறான்.

"நீ புக்ல படிச்சது, செல்சியஸ் அளவுமுறை, டாக்டர் உன்கிட்டே சொன்னது ஃபாரன்ஹீட் அளவுமுறை, ரெண்டும் வேற வேற கணக்கு" என்று விளக்குகிறார் அப்பா.

ஃபாரன்ஹீட் அளவில் நம்ம உடம்போட வெப்பநிலை 98.4 டிகிரி இருக்க வேண்டும், செல்சியஸ் அளவில 37 டிகிரி இருக்கவேண்டும், அதுக்குமேல போனா,



லேசா ஜுரம் வரும், அவ்ளோதான். 102 டிகிரி ஃபாரன்ஹீட்ங்கறது சாதாரணமான ஒரு விஷயம் உன் உயிருக்கு இப்ப எந்த ஆபத்தும் இல்லை."

சட்டென்று அந்தப் பையன் முகத்தில் நிம்மதி பரவுகிறது. டென்ஷன் மறைந்து புன்னகை செய்ய ஆரம்பிக்கிறான்!

நமக்கு இந்த செல்சியஸ், ஃபாரன்ஹீட் குழப்பம் வராமல் இருக்க ஓர் எளிய ஃபார்முலா பாருங்கள் :

செல்சியஸ் =

(ஃபாரன்ஹீட் - 32) x 5/9

உதாரணமாக, 100 டிகிரி ஃபாரன்ஹீட் என்றால்,

செல்சியஸ் =

(100 - 32) x 5/9 = 37.8 டிகிரி

இதேபோல், ஃபாரன்ஹீட்டிலிருந்து செல்சியஸுக்குக் கணக்குப் போடுவதும் ரொம்பச் சுலபம்:

ஃபாரன்ஹீட் =

(செல்சியஸ் + 32) x 9 / 5

அது சரி, செல்சியஸ், ஃபாரன்ஹீட் தவிர, உலகத்தில் வேறு வெப்பநிலை அளவுமுறைகளும் உண்டா?

ஓ, நிறைய உண்டு. இதோ, இந்த இரண்டு ஒப்பீடுகளைப் பாருங்கள், புரியும்:

"நான் 102 டிகிரிக்கே போய்ட்டேன், அவ்ளோதான். என்கதை முடியப்போகுது"

பனிக்கட்டி உறையும் வெப்பநிலை = 0 டிகிரி செல்சியஸ்; 32 டிகிரி ஃபாரன்ஹீட்; 273.15 டிகிரி கெல்வின்; 491.67 டிகிரி ரான்கைன்; 150 டிகிரி டெலிஸில்; 0 டிகிரி நியூட்டன்; 7.5 டிகிரி ரோமர்

அப்படியானால், தண்ணீர் ஆவியாகும் வெப்பநிலை = 100 டிகிரி செல்சியஸ்; 212 டிகிரி ஃபாரன்ஹீட்; 373 டிகிரி கெல்வின்; 671 டிகிரி ரான்கைன்; 0 டிகிரி டெலிஸில்; 33 டிகிரி நியூட்டன்; 60 டிகிரி ரோமர்.

சரி, சரி; இதைப்பற்றி ரொம்ப யோசித்து உடம்பை அலட்டிக்கொள்ளாதீர்கள். செல்சியஸிலோ, ஃபாரன்ஹீட்டிலோ ஜுரம் வந்துவிடப்போகிறது! ●

அலமாரி

மனிதர்களான தவறு!

கல்மாலை

ஆசிரியர் : ரேவதி, வெளியீடு : பழனியப்பா பிரதர்ஸ், 'கோனார் மாளிகை', 28 பீட்டர்ஸ் சாலை, சென்னை - 14.

கல்வியறிவு எந்த அளவுக்கு முக்கியமா, அதே அளவுக்கு நல்ல குணங்களும் முக்கியம். அப்படி ஐந்து நற்பண்புகளை உணர்த்துகின்ற அழகான ஐந்து கதைகள். வயதான பெற்றோரை பராமரித்தல், செய்நன்றியை மறவாதிருத்தல், பொது நலத்தை விரும்புதல், நம்மைச் சார்ந்தவர்களையும் ஆதரித்தல், பணிவின் அவசியம், மரங்களையும், காடுகளையும் பாதுகாக்க வேண்டியதன் அவசியம்... என்று அறவுரைகள் கதைப் போக்கில் புகட்டுகிறார் உங்கள் கோகுலம் இதழின் முன்னாள் கௌரவ ஆசிரியர் ரேவதி.







சூடாகும் பூமி

ஆசிரியர் சூசன் பிலிப். வெளியீடு: ப்ராடிஜி, நியூ ஹொரைசன் மீடியா பிரைவேட் லிமிடெட், 33/15, எல்டாம்ஸ் சாலை, ஆழ்வார்ப்பேட்டை, சென்னை - 600 018. விலை ரூ.25/-

எளிமையான நடை. அழுத்தமான வார்த்தைப் பிரயோகம்; கனமான செய்திகள் என்று அமைந்துள்ள நூல். உலகம் எதிர் நோக்குகின்ற பிரச்னை, பூமி சூடாவதுதான். அதற்குக் காரணம் கண்டுபிடிப்பு என்ற பெயரில், காற்றிலும் சுற்றுச் சூழலிலும் மனிதன் ஏற்படுத்தியுள்ள பாதிப்புகள் என்பதையும் சுட்டிக் காட்டியிருக்கிறார். சிட்டுக் குருவிகள் கண்ணில் படாதது முதல், சுனாமி வரை, பலவும் மனிதத் தவறுகளின் விளைவே என்பது கவனத்துக்குரிய விஷயம்!

உயர்ந்தவர்களின் இளமைக்காலம்

ஆசிரியர் : சபீதா ஜோசப், வெளியீடு : நேஷனல் பப்ளிஷர்ஸ், 2, வடக்கு உஸ்மான் சாலை (கோடம்பாக்கம் மேம்பாலம் அருகில்) முதல் மாடி, தியாகராய நகர், சென்னை - 17. விலை ரூ.45/-

அன்னை தெரசா முதல் முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் வரை முப்பது சாதனையாளர்களின் இளமைக் காலத்தில் நடந்த சுவையான நிகழ்ச்சிகளின் தொகுப்பு. அவர்களின் வெற்றிக்கு அடித்தளம், சலிப்பறியாத உழைப்பும், தன்னம்பிக்கையும், ஆழ்ந்த சிந்தனையும்தான் என்பதை, இந்த முப்பது பேரின் வாழ்க்கைச் சம்பவங்கள் உணர்த்துகின்றன.

- ராகவன்


சிரிப்பலை
"அம்மா! பேப்பர்ல மழை பெய்யும்னு போட்டிருக்கு."
"அப்படியா, பேப்பரை எடுத்து உள்ளே வைடா!"
"அவனுக்கு கண்ணுல அடி பட்டுடுச்சுன்னு நினைக்கிறேன்..."
"எப்படிச் சொல்றே?"
"Eyeயோ Eyeயோன்னு அழுறானே!"
வீட்டு நாய்!
"பாக்டீரியா படம் வரையச் சொன்னேனே, எங்கேடா காணோம்?"
"பாக்டீரியா நுண்ணுயிரி. அதுதான் கண்ணுக்குத் தெரியலை"
"கோதுமைக்கு ஏன் நாயைக் காவல் போட்டிருக்கே?!"
"நாய்தான் Wheat-ஐ காக்கும்"
மா. கண்ணன்,
திருநெல்வேலி.



பெயர் : ....

முகவரி : ....

....

....

ஒரு வருட சந்தா ரூ. 96/-. இதை டிமாண்ட் டிராஃப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்க வேண்டும். உள்ளூர் காசோலைகள் மட்டுமே ஏற்கப்படும்.

அனுப்ப வேண்டிய முகவரி :

சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்), கல்கி பில்டிங்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 032

வசந்தபுரி வளம்மிக்க நாடு. எல்லா வகையிலும் மக்கள் நிறைவாக வாழ்ந் தார்கள். ஆனால், அந்நாட்டு மக்கள் யானையையே பார்த்தது கிடையாது. ஒருநாள் வேறொரு நாட்டைச் சேர்ந்த யானைப்பாகன், ஒரு யானையை ஓட்டிக் கொண்டு அந்த நாட்டிற்குள் நுழைந்தான்.

மக்கள் அந்த யானையை கூட்டம் கூட்டமாக வேடிக்கை பார்க்க ஆரம் பித்தனர். விஷயம் அரசனுக்கு எட்டியது. யானையை அரசவைக்கு வரவழைத் தான். அதன் பெரிய உருவத்தைப் பார்த்து வியந்த அரசனுக்கு அதன் எடை என்ன இருக்கும் என்று தெரிந்து கொள்ள ஆசை ஏற்பட்டது.

தன்னுடன் இருந்த அமைச்சர்களைப் பார்த்து, ''இந்த யானை எவ்வளவு எடை இருக்கும்?'' என்று கேட்டான். யாராலும் சரியான பதிலைச் சொல்ல முடியவில்லை. அக்காலத்தில் எடைக் கற்கள் இருந்தன. ஆனால் யானையை எடை போடக்கூடிய அளவுக்கு பெரிய கருவிகள் இல்லை. எனவே யாராலும் அரசன் கேட்ட கேள்விக்கு தகுந்த பதிலைச் சொல்ல முடியவில்லை.

பிறகு அரசவையில் இருந்தவர் களைப் பார்த்து, ''இந்த யானையின் எடையை யார் சரியாக சொல்லு கிறீர்களோ அவர்களுக்கு பத்தாயிரம் பொற்காசுகள் பரிசாக வழங்கப் படும்'' என்றான் மன்னன்.

நாட்கள் ஓட ஆரம் பித்தன. யானையின் சரி யான எடையை சொல்ல



யாராலுமே முடியவில்லை. ஒரு நாள் வேற்று நாட்டைச் சேர்ந்த ஒரு முதியவர் அந்த நாட்டுக்கு வந்தார். யானையின் சரியான எடையைத் தெரிந்து கொள்ள அரசன் ஆசைப்படும் விஷயத்தைக் கேள்விப்பட்டார்.


உடனே அவர் அரசவைக்குச் சென்று, ''அரசே! தங்களின் கேள்விக்கு என்னால் விடை சொல்ல முடியும்'' என்றார். அரசன் ஆச்சர்யத்தோடு, ''இந்த யானையின் எடை எவ்வளவு இருக்கும்? சொல்லுங்கள் பார்க்கலாம்'' என்றான்.

''அரசே! உங்கள் வீரர்களை நிறைய எடைக்கற்களை எடுத்துக் கொண்டு கடற்கரைக்கு வரச் சொல்லுங்கள். யானையையும் கடற்கரைக்கு ஓட்டி வரச் சொல்லுங்கள்'' என்றார் அவர்.

அரசனுக்கு எதுவும் புரியவில்லை. ஆனால் முதியவர் சொன்னபடியே செய்யும்படி உத்தரவிட்டு, அரசனும் அவனுடைய பரிவாரத்தினரும் கடற்கரைக்கு சென்றனர். ஏராளமான மக்கள் கடற்கரையில் கூடியிருந்தனர்.


முதியவர் ஒரு பெரிய படகை கொண்டு வரச் சொன்னார். யானையை அந்தப் படகில் நிறுத்தச் சொல்லி தண்ணீரில் மிதக்க விடச் சொன்னார். படகு எவ்வளவு அளவு தண்ணீரில் மூழ்கியதோ, அந்த அளவிற்கு வண்ணச் சாயத்தால் படகைச் சுற்றி குறியிட்டார். அதன்பின் அரசனை நோக்கி, ''அரசே! இப்பொழுது இந்தப் படகில் நான் குறியிட்டுள்ள வண்ணச் சாயம் நீரில் மூழ்கும்வரை எடைக்கற்களை எடுத்து படகில் வைக்கச் சொல்லுங்கள். எவ்வளவு எடைக்கற்கள் படகில் உள்ளனவோ அதுதான் யானையின் உண்மையான எடை'' என்றார்.

முதியவரின் அறிவைப் பாராட்டிய அரசன் தான் சொன்னபடியே பத்தாயிரம் பொற்காசுகளைக் கொடுத்து அவரைக் கௌரவித்தான். ●



இரா. வசந்தராசன்

யானையின் எடை!



காட்டில் குழந்தை பிறந்தது!

கவிதை.படம்: எஸ். வஜ்ரவேலு

வெள்ளை முயல் அம்மாவுக்கு
குழந்தை பிறந்ததாம் - காட்டில்
குழந்தை பிறந்ததாம்!
சொல்ல முடியா இன்பமெங்கும்
சூழ்ந்து நின்றதாம் - எங்கும்
சூழ்ந்து நின்றதாம்!

நெடுங்கவிதை

நெட்டையராம் ஒட்டைச் சிவிங்கி
நடந்து வந்தாரே - விரைவாய்
நடந்து வந்தாரே!
நான்கு கால்கள் இடையில் தொட்டில்
கட்டி நின்றாரே - அழகாய்
கட்டி நின்றாரே!

குட்டை குரங்கார் கையை காலை
ஆட்டி வந்தாரே - அங்கே
ஆட்டி வந்தாரே!
குணத்தில் மிக்க காளை, பசுவைக்
கூட்டி வந்தாரே - அன்பாய்க்
கூட்டி வந்தாரே!


பஞ்ச வண்ணக் கருவியோடு
மயிலும் வந்தாம் - இன்ப
மயிலும் வந்ததாம்!
பரவசமாய் ஆடல் பாடல்
நடத்தித் தந்ததாம் - மானும்
நடத்தித் தந்ததாம்!

கொஞ்சும் கிளிகள், காகம், கழுகு
பறந்து வந்ததாம் - காற்றில்
பறந்து வந்ததாம்!
கொக்கும், பருந்தும் ஆந்தையுமே
கூட நின்றதாம் - மகிழ்வாய்க்
கூட நின்றதாம்!

சொந்தம் நாங்கள் என்று சிங்கம்
நரியும் வந்ததாம் - குறும்பு
நரியும் வந்ததாம்!
சிரித்துக் கொண்டே சிறுத்தை புலியும்
சேர்ந்து வந்ததாம் - ஒன்றாய்ச்
சேர்ந்து வந்ததாம்!

வந்த மக்கள் அனைவரையும்
வருக என்றதாம் - ஆனை
வருக என்றதாம்!
வரவேற்று இனிப்பு தந்து
இன்பம் கொண்டதாம் - கரடி
இன்பம் கொண்டதாம்!

ஒற்றுமையால் இன்பம் உண்டு
உண்டு நன்மையே - நிறைய
உண்டு நன்மையே!
ஒற்றுமையால் உயர்வு உண்டு
உண்டு உண்மையே - என்றும்
உண்டு உண்மையே!





புல்லையும்

சமீபத்தில் 'ஷெங்கன் ஸ்டேட்ஸ்' செல்லும் வாய்ப்பு அமைந்தது. ஐரோப்பா, அமெரிக்கா என்று சொன்னால் புரியுமளவுக்கு, இந்த வார்த்தை புரியாது.

அதாவது, பெல்ஜியம், ஜெர்மனி, நெதர்லாந்து, ஃப்ரான்ஸ், லக்ஸம்பர்க், ஸ்பெயின், போர்ச்சுக்கல் ஆகிய நாடுகள் இதில் அடங்கும். விஸாவில் 'ஷெங்கன் ஸ்டேட்ஸ்' என்று முத்திரை பதித்து தந்து விடுகிறார்கள். பெல்ஜியத்தில் இறங்கும்போது பாஸ்போர்ட்டை காட்டியதுதான். அதன்பிறகு கிளம்பும்வரை அதை யாருமே கேட்கவில்லை, என்றாலும், அதை கையில் வைத்திருந்தது வேறு விஷயம்?

இந்தப் பயணத்தில் மிக முக்கியமான விஷயம், பொருள்களை பாதுகாப்பது பற்றியது. பொருள் என்றவுடன் பீரோ, கட்டில், ஃப்ரிட்ஜ் என்று யோசிக்க வேண்டாம். நாம் சாதாரணம் என்று கருதும் வைக்கோலும் புல்லும்கூட, மாடுகளுக்கு அவசியம்! அதைப் பாதுகாப்பதில்கூட அவர்கள் காட்டும் கவனம் மிக ஆச்சர்யமானது.

படத்தில் உருளை உருளையாக காணப்படுபவை அத்தனையும் வைக்கோல் கட்டுக்கள்! நம் ஊர்களில் போர்களாகக் குவித்திருப்போம்.


ப்ரான்ஸ், பெல்ஜியம் போன்ற எல்லா நாடுகளிலும், வயல்வெளிகளும், புல்வெளிகளும் அதிகம். அங்கே கோதுமை பெருவாரியாக விளைக்கிறது. ஏராளமான புல்வெளிகள் விரிந்து பரந்து கிடக்கின்றன. மாடுகளை இங்கு மேய்ச்சலுக்கு விடுகின்றனர். கோதுமை



வி.ஜெயலட்சுமி

சேமிக்கலாம்!

கட்டுரை



அறுவடையானதும், வைக்கோலை இயந்திரத்தின் உதவியுடன் ஒன்றன் மேல் ஒன்றாக அழுத்தி வைத்து, உருளை வுடிவத்தில் செய்து விடுகின்றனர். இவை அனைத்தையும் குடவுனில் அடுக்கி அடுக்கி வைத்து விடுகின்றனர். மேலே, நீலம் கறுப்பு, பச்சை என்று பல வண்ண போர்வையில் மூடுகின்றனர். படத்தில் பார்ப்பது அத்தகைய உருளைகள்தான். எப்போது தேவையோ அப்போது உருளைகளை வெளியில் எடுத்து, அவற்றைத் திறந்து, வைக்கோலை வெளியிலெடுத்து கால் நடைகளுக்கு உணவாகத் தருகின்றனர். ஒரு குடவுனில் ஏராளமான உருளைகளை அடுக்கி வைக்கலாம். மழையில் வீணாகாது. இதே போல புல்லையும் வெட்டிச் சேமிக்கின்றனர். அன்றன்றைக்கு காலநிலையை கால நிலை மையங்கள் டி.வி.யிலும், ரேடியோவிலும் இன்டர்நெட்டிலும் சொல்லி விடுகின்றன. அதன்படி விவசாயிகள் தகுந்த பதத்தில் அறுத்த புல்லையும் வைக்கோலையும் இயந்திர உதவியுடன் உருளையில் அழுத்தி சேகரித்து விடுகின்றனர்.

நீலம், கறுப்பு போன்ற உரைகளால் போர்த்தப்பட்டிருப்பவை வைக்கோல் என்பதாகவும், பச்சை புல்லுக்காகவும் அடையாளம், தெரிவதற்காகத் தரம் பிரிக்கப்பட்டுச் சேகரிக்கப்படுகின்றன. மழை பெய்யும் தினத்தில் வயல் வெளியிலும் புல் வெளியிலும் ஒரு உருளைகூட காணப்படமாட்டாது. எல்லாவற்றையும் அப்புறப்படுத்தி விடுகின்றனர். அடுத்து வெயில் வரும்போது மீண்டும் வெயிலினடியில் சரியான பதத்துக்குக் காய வைக்கப்பட்டுப் பிறகு மீண்டும் குடவுனில் வாசம்!

புல்லைக்கூட அழுகவிடாமல் பதப்



படுத்திச் சேமிக்கின்றனர் அந்த விவசாயிகள். பெரிய பெரிய விளக்கு களை இயந்திரத்தில் பொருத்திக்கொண்டு இரவு 12 மணி வரை வயலில் கடுமையாக உழைக்கின்றனர், இந்த உழவுத் தொழில் பக்தர்கள்.



நம் நாட்டில் விளையும் உணவுப் பொருட்களை பாதுகாக்க நட வடிக்கைகள் எடுக்காததால், ஆண்டுக்கு ஐம்ப தாயிரம் கோடி ரூபாய் அளவுக்கு நஷ் டம் ஏற்படுவதாக செய்திகள் வரு கின்றன.


உணவுப் பற்றாக் குறை ஒருபுறம், விளைந்த உணவுப் பொருள்களை பாது காக்கவும் தவறுவதால் ஏற்படும் நஷ்டம் மறுபுறம்; தவிர, அந்த விவசாயி களின் உழைப்பு வீணாவது இன் னொரு புறம்!



உணவுப் பொருள் களையே பாதுகாக்கத் தெரியாத நாம், எப்போது வைக்கோலையும் நெல்லையும் பத் திரப்படுத்தப் போகிறோம்?' பெல் ஜியப் பயணம் நமக்குள் ஏற்படுத்திய கேள்வி இது? வழக்கம்போலவே, பதில் தெரியத்தான் இல்லை.



உழைப்பின் முக்கியத் துவத்தைப் போலவே, சேமிப் பின் சிறப்பையும் உணர்ந்தால் தான் சாதனைகளும் நமக்கு வசப்படும்.



கோகுலம் டைஜஸ்ட்

இந்த டைஜஸ்டில்...

உள்ளே...

பயனுள்ளது!



மகாத்மா காந்தியடிகளின் மீது கடுமையான கோபம் கொண்ட ஓர் ஆங்கில உயர் அதிகாரி, மகாத்மாவை இழிவுபடுத்த வேண்டும் என எண்ணி பல பக்கங்கள் கொண்ட ஒரு கடிதத்தை எழுதினார். அதனை இணைக்க ஒரு குண்டுசியை பயன்படுத்தினார். பிறகு கடிதம் மகாத்மாவின் கைக்குப் போயிற்று. அந்தக் கடி தத்தைப் படித்து முடித்த மகாத்மா, குண்டுசியை மட்டும் எடுத்துக் கொண்டு கடிதத்தை குப்பைக் கூடை யில் போட்டுவிட்டார். அதைக் கவனித்த அந்த அதிகாரி, 'ஏன் இப்படிச் செய்தீர்கள்'' என்றார். அதற்கு மகாத்மா, ''நீங்கள் கொடுத்த கடிதத்தில் பயனுள்ளது அந்த குண்டுசிதான். அதை எடுத்துக் கொண்டுவிட்டேன்' என்றார். 'கடிதம் பயனற்றது' என்று, சொல்லாமல் உணர்த்தியதால், அந்த அதிகாரி வெட்கித் தலைகுனிந்தார்.

- ச.தேவேந்திரன்,
எட்டாம் வகுப்பு,
வெள்ளம்பி



நடந்த தவறு!


அமெரிக்க அதிபராக இருந்த ஆப்ரஹாம் லிங்கன், சிறுவனாக இருந்த சமயம்! அப்போது வயது பதினான்கு. வீம்ஸ் என்பவர் ஜார்ஜ் வாஷிங்டனின் வரலாற்றை விரிவாக எழுதியருப்பதாக அவர் கேள்விப்பட்டார். அந்தப் புத் தகத்தை எப்படியாவது படிக்க வேண்டும் என்று விரும்பினார். பலரிடமும் விசாரித்தார். அப் போது பன்னிரெண்டு மைல் களுக்கு அப்பால் உள்ள ஜோஸய்யா கிரா∴போர்டு என் னும் விவசாயியிடம் அந்தப் புத்தகம் இருப்பதை அறிந்தார். அவரின் வீட்டுக்குச் சென்று இரவல் வாங்கிவந்தார். வீட்

டுக்கு வருவதற்குள் இருட்டிவிட்டது. அடுப்பு வெளிச்சத்தில் உட்கார்ந்து படித்தார். பிறகு புத்தகத்தை சுவரின் இடுக்கில் செருகி வைத்துவிட்டு அயர்ந்து தூங்கிவிட்டார்.

இரவு கொட்டிய மழையில், புத்தகம் மொத்தமும் நனைந்துவிட்டது. பதறிப்போன அவர், புத்தகத்தை நன்றாக வெயிலில் காயவைத்து மீதமுள்ள பக்கத்தையும் படித்து முடித்தார். மீண்டும் அந்த விவசாயியை சந்தித்துக் கூறினார் : "ஐயா, தவறு நடந்து விட்டது. நேற்று பெய்த மழையில் புத்தகம் நனைந்துவிட்டது.புத்தகத்திற்கு உரிய தொகையை கொடுத்து விடுகிறேன்" அதை விவசாயி ஒப்புக் கொண்டார். அவருடைய தோட்டத்திலேயே மூன்று நாட்கள் வேலை செய்து புத்தகத்தை தனக்கு சொந்தமாக்கிக் கொண்டார். The Life of Washington என்பதுதான் லிங்கன் விரும்பிப் படித்த அந்தப் புத்தகம்!

- சா.க. செந்தமிழ்ராஜா, ஆறாம் வகுப்பு, ஏ.கே.டி. மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, கள்ளக்குறிச்சி

சம்பவம்...



பிரான்ஸ் நாட்டின் மன்னரான 18ஆம் லூயி, நூலொன்றை எழுதி பாரீஸிலிருந்து வெளிவந்த பிரபலமான பத்திரிகை ஒன்றுக்கு விமர்சனம் எழுதக் கேட்டு அனுப்பியிருந்தார். மன்னரே எழுதியிருப்பதால் பாராட்டி எழுதுவார்கள் என்ற எதிர்பார்ப்பு அவருக்கு. அந்த பத்திரிகை எழுதிய மதிப்புரை பின்வருமாறு அமைந்தது.

"இது மன்னரால் எழுதப்பட்டிருப்பதால் விமர்சனத்துக்கு அப்பாற்பட்டது. மன்னரைத் தவிர வேறெவரும் எழுதியிருந்தால், விமர்சனத்துக்கே அருகதையற்றது."

- சு.அபிஷேக், உ. எண் 518, சென்னை



விமர்சனம்!

I. 1961 என்ற எண்ணின் சிறப்பு என்ன?

II. 6729, 13458 - இந்த இரு எண்களில் காணப்படும் புதுமை யாது?

- கி.பாலாஜி, உ. எண் 657, மயிலாடுதுறை

III. கீழே கேட்கப்பட்டிருக்கும் 7 கேள்விகளுக்கும் பதில்களின் முதல் எழுத்து சி.

1. தட்சிணாமூர்த்தி கோலத்தின் முத்திரை ....


2. அனைத்துலக சர்வசமய மாநாடு நடந்த இடம் ....

3. இந்தியாவின் ஜப்பான் ....

4. பல்லவ மன்னன் மகேந்திர வர்மனின் பட்டப் பெயர்களுள் ஒன்று ....

5. ஆகாய ஸ்தலம் என்றழைக்கப்படுவது ....

6. பிரான்ஸ் நாட்டின் செவாலியர் விருது பெற்ற முதல் இந்தியர் ....



7. மூன்று நகரங்களின் கதை என்று அழைக்கப்படும் தமிழ் இலக்கியம் ....

- எஸ்.தீபக்குமார், ஆறாம் வகுப்பு, கமலா சுப்ரமணியன்



பலே

மேல்நிலைப் பள்ளி, தஞ்சாவூர்

IV. 8 : x = 4 : 3 என்றால், xன் மதிப்பு என்ன?

V. 3, 6, -, 24, 48, -, 192 கோடிட்ட இடத்தில் என்ன எண் இருக்க வேண்டும்?

- எஸ்.வினித் மாதவன், உறுப்பினர் எண் 1196, மதுரை

VI. கீழ்கண்ட கேள்விகளுக்கான பதில்களின் முதல் எழுத்து, 'வி'.

1. மகசேசே விருது பெற்ற முதல் இந்தியர் ....

2. ஐ.நா. தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் தலைமையகம் உள்ள இடம் ....

3. நிறமாலை வரிகளின் பெயர் ....

4. பஞ்ச தந்திரக் கதைகளை

எழுதியவர் ....

5. தமிழ்நாட்டின் மிகப் பெரிய சட்ட மன்ற தொகுதி ....

6. சிறுகதை மன்னன் புதுமைப் பித்தனின் இயற்பெயர் ....

7. இந்தியாவில் கப்பல் தொழிற் சாலை உள்ள இடம் ....

8. குறைந்த வயதில் பத்மஸ்ரீ விருது பெற்ற செஸ் விளையாட்டு வீரர் ....

9. இந்தியாவின் முதல் பெண் வெளிநாட்டு தூதர் ....

- கே.அனுசுயா, மன்னார்குடி

காரம்?!

VII. கீழே கேட்கப்பட்டிருக்கும் 5 கேள்விகளுக்கும் பதில்களின் முதல் எழுத்து 'சி'.

1. பூனைக் குடும்பத்தைச் சேர்ந்த காட்டு விலங்கு ....

2. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்று ....

3. பதினெண் சித்தர்களுள் ஒருவர் ....

4. இராஜராஜ சோழனின் பட்டப் பெயர்களில் ஒன்று ....

5. அர்ச்சுனன் மனைவியருள் ஒருவர் ....

VIII. ஒரு எண்ணை அதே எண்ணால் பெருக்கினாலும், கூட்டினாலும் வரும் தொகை ஒன்றே. அப்படியானால் அந்த எண் யாது?

- ஆர்.வியோன்கென்னடி, நான்காம் வகுப்பு, டான்பாஸ்கோ மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, தஞ்சாவூர்

IX. இங்கே பல காரங்கள் உள்ளன. அவற்றை கண்டுபிடியுங்கள்.

1. திருக்குறளில் இருப்பது; தீயவர்கள் செய்வது .... காரம்.

2. ஆணவக்காரர்கள் கொள்வது



.... காரம்


3. பெரியவர்களைக் கண்டால் செய்ய வேண்டியது .... காரம்

4. மேக்அப் என்பது .... காரம்.

5. அழகு மட்டுமல்ல; பெயரும் கூட .... காரம்.

- ஆ.விஜயலக்ஷ்மி, பத்தமடை

விடைகள் 56ம் பக்கம்




ஜா.கெ.டரணி ஆன்டனி,
ஏழாம் வகுப்பு, மான்ஃபோர்ட்
பள்ளி, திருச்சி



ஆர்.ஆராதனா,
எட்டாம் வகுப்பு, ஸ்ரீவித்யா
மந்திர் மெட்ரிக் பள்ளி, சேலம்



செ.விவேக்,
பத்தாம் வகுப்பு, நா.சு.வி.வி.
ஆண்கள் மேல்நிலைப் பள்ளி,
திண்டுக்கல்



ர.ஸ்ரீநிதி,
உ. எண் 42, எட்டாம் வகுப்பு,
தி.ஆ.வே. பெல் பள்ளி,
இராணிப்பேட்டை

உங்கள்




எஸ்.வனிதா,
ஒன்பதாம் வகுப்பு, செம்பன்னா
ஓதிமலை அரசு மகளிர் மேல்நிலைப்
பள்ளி, பு.புளியம்பட்டி



கே.தனசேகர்,
பத்தாம் வகுப்பு, காமராஜ்
மேல்நிலைப் பள்ளி, நம்பியூர்

கு.பாரதி,
எட்டாம் வகுப்பு, கிங் யுனிவர்ஸ்
மெட்ரிக் குலேசன் பள்ளி,
கடையநல்லூர்





ப.தர்ஷினி,
உறுப்பினர் எண் 568,
பன்னிரெண்டாம் வகுப்பு, சி.சி.எம். மேல்நிலைப்
பள்ளி, இடையன்குடி

கைவண்ணம்!

மிகப் பழைமையான வரலாற்றுப் பின்னணியைக் கொண்ட இந்திய மாநிலம் மத்தியப் பிரதேசம்.

இங்குள்ள இந்தோரில், கண்ணாடிக் கோயில் என்று ஒரு கோயில் உள்ளது. 'காஞ்ச் மந்திர்' அல்லது 'ஹுக்கும் சந்த் ஜெயின் மந்திர்' என்று குறிப்பிடுகிறார்கள். இது ஒரு சமணர் கோயில். இந்தக் கோயில் இரயில் நிலையத்திலிருந்து மூன்று கி.மீ. தூரத்தில் உள்ளது.

மூன்று மாடிகள் கொண்ட இந்த கோயில் முழுக்க முழுக்க கண்ணாடி





W. நடராஜன்,
புள்ளமங்கலம்.

யால் ஆனது. தளங்கள், சுவர்கள், மாடங்கள் அனைத்துமே கண்ணாடி பதிக்கப்பட்டு பளபளக்கின்றன. பளிங்குக் கல் பதித்த நடைநிலைக் கதவுகளும், படிக்கட்டுகளும் கண்ணாடியால் ஆனவையே. கண்ணாடிச் சுவர்களில் சமண மத புனித ஸ்தலங்கள், தீர்த்தங்கரர்களின் பெருமை, புராணக் கதைகள் சித்திரங்களாக தீட்டப்பட்டுள்ளன.


சமணத் துறவிகளின் பிராயச்சித்தம் மரணம் தான்; அதேபோல் வாதங்களில் தோற்றவர்கள் சந்திக்க வேண்டியதும் அதுவேதான்! அந்த

மரண தண்டனையை நிறைவேற்றப் பயன்படும் கருவிகளான கழுமரம், ஈட்டி... போன்றவையும் கண்ணாடியால் செய்யப்பட்டு இங்கே வைக்கப்பட்டுள்ளன.

பளிங்குச் சிற்பங்கள், மாடிப் படிக்கட்டுகள், கைப்பிடிச் சுவர்கள், உண்டியல்கள், கிண்ணங்கள் என அனைத்தும் கண்ணாடியால் செய்யப்பட்டு பளபளக்கின்றன. இதற்கான கண்ணாடிகள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன. ஹுக்கும் சந்த் ஜெயின் என்பவரால் 1921ஆம் ஆண்டு இந்தக் கண்ணாடிக் கோயில் கட்டப்பட்டது.

ஓரிடத்தில் மூன்று தீர்த்தங்கரர்களின் சிலை உள்ளது. அதனருகே உள்ள கண்ணாடியில் பார்த்தால் 24 தீர்த்தங்கரர்களின் பிம்பங்கள் தெரிகின்றன. கோயிலுக்கு பின்னாலுள்ள மணி மண்டபத்தில் ஏராளமான பதுமைகள் உள்ளன. ஒன்றிற்கொன்று வித்தியாசமான சித்திர வேலைப்பாடுகள் நிறைந்த தூண்களின் வனப்பிற்கு ஈடு இணையே கிடையாது. சுற்றுலாவாகச் சென்றாலும் சரி; யாத்திரையாகச் சென்றாலும் சரி; இந்த சமணர் கோவிலை பார்க்கத் தவறாதீர்கள்.

கண்ணாடிக் கோயில்!



தொட்டாற்சிணுங்கி செடியின் இலைகளைத் தொட்டால், அவை சுருங்குவது ஏன்?



செடியின் இலைகள் பல்வேறு வகைப்பட்ட உயிரணுக்களால் ஆனவை. ஒவ்வொரு உயிரணுவும் சில திரவப் பொருட்களைத் தன்னகத்தே கொண்டுள்ளன. இத்திரவத்தின் அழுத்தம் காரணமாக உயிரணுக்களும், அவற்றால் இலையும் உறுதியாக நிமிர்ந்திருக்க முடிகின்றது. இலையின் உயிரணுவில் இருந்து திரவம் வெளியேறிவிட்டால், திரவ அழுத்தம் நீங்கி, இலையின் உறுதித் தன்மை தளர்ந்துவிடும். 'மிமோசா புடிகா' என்பது தொட்டாற் சிணுங்கியின் தாவரவியல் பெயர். இச்செடியின் இலையைத் தொடும்போது, அதன் கீழ்ப்பகுதி உயிரணுக்களில் உள்ள திரவத் தன்மை நீங்கிவிடுகிறது. ஆனால், மேற்பகுதி அணுக்கூறில் உள்ள திரவத் தன்மை நீங்குவது இல்லை. மேற்பகுதி இலையின் எடை காரணமாக, தொட்டவுடன், முழு இலையும் சுருங்கி விடுகின்றது.

பெரிய

கொட்டாவி விடுவதற்கு காரணம் என்ன?



கொட்டாவி விடுவதற்கு சலிப்பு, சோர்வு ஆகியவை மட்டுமே காரணங்கள் அல்ல. அதிகமான ஆக்ஸிஜன் நம் உடலுக்குத் தேவை என்பதன் அறிகுறியே கொட்டாவி விடுவதாகும். வாயைப் பெரிதாகத் திறப்பதன் மூலம் காற்றிலுள்ள ஆக்ஸிஜன் மிகுதியாக உள்ளே செல்கிறது. இவ்வகையில் நுரையீரலுக்கு தேவையான காற்று உட்செல்லுவதுடன், இரத்தமும் தேவையான ஆக்ஸிஜனைப் பெற முடிகிறது. மேலும் தேவையற்ற கரியமில வாயுவும் வெளியேற்றப்படுகிறது.

முயல்களுக்கு நீண்ட காதுகள் இருப்பதேன்?

முயல்கள் மிகவும் பயந்த சுபாவம் உடையவை. எதிரி தன்னை நெருங்கு வதை, அதன் காலடி ஓசையைக் கொண்டே முயல்கள் தெரிந்து கொள்கின்றன. காதிலுள்ள மடல்கள், ஒலியலைகளை வாங்கி உள்ளே செலுத்தவே உதவுகின்றன. மடல்கள் பெரிதாக இருந்தால், அதிகமான ஒலி அலைகளை கிரகிக்க முடியும். லேசான ஒலியசைவையும் உணரக் கூடியவை முயலின் காதுகள்.



காதுகள் ஏன்?

உடல் இறுக்கம், சோம்பேறித்தனமாக, நீண்ட நேரம் உட்கார்ந்திருந்தல் ஆகியவற்றால் சரியாக மூச்சை இழுத்து விடாமையே இதற்கு காரணம். எனவே சுறுசுறுப்பு, அளவான உடற்பயிற்சி ஆகியவை கொட்டாவி வருவதைப் பெருமளவு தவிர்க்கும்.

- எஸ்.தணிகைவேல்,
பன்னிரெண்டாம் வகுப்பு,
சி.எஸ்.எம். ந.மே.நி. பள்ளி,
உறுப்பனர் என் 762, பெரிய
காஞ்சீபுரம்

மேகங்கள் பல வடிவங்களில் காணப்படுவது எதனால்?

மேகங்கள் ஆச்சரியப்படும்படியாக பல வடிவங்களில் தென்படுகின்றன. ஏனெனில் மேகம் எவ்வளவு உயரத்தில் இருக்கிறது; அதில் நிலவும் தட்ப வெட்பம் எவ்வளவு என்பதைப் பொறுத்து, அதன் வடிவம் அமைகிறது. தவிர, மேகங்களில் நுண்ணிய நீர்த் திவலைகளும் பனிக்கட்டித் துகள்களும்கூட இருக்கும். மேகங்கள் உருவாவதற்கு உதவும் காற்றும் அதன் வடிவமைப்புக் குக் காரணமாக உள்ளது.

- பிரகதீஷ்
சுப்ரமணியன்,
காரைக்கால்



கற்பனைக்கு வேலை



இங்குள்ள
படத்துக்கு
வண்ணம் தீட்டி
மகிழுங்கள்

வண்ணம் தீட்டுங்கள்!



வித்தியாசங்களைக் கண்டுபிடி!



இரண்டு படங்களுக்கும் இடையே ஐந்து வித்தியாசங்கள் உள்ளன. அவற்றைக் கண்டுபிடியுங்கள்.

ஏமாந்த அணில்!

கதை: க.கார்த்திக்,
உ.எண்: 952,
காமராஜ்
மேல்நிலைப்பள்ளி,
நம்பியூர்.
படம்: சொக்கலிங்கம்







இப்ப சொல்லுங்க. யார் குரல் இனிமை?
என் குரல்தான்.
என் குரல் கேட்கலையா.
என் குரல்தான் இனிமை
குரலா அது? கேட்டாலே பயம் வருகிறது.
அதை நீ சொல்லாதே.
பேச்சு சண்டையானது.
என்னோடு பேசாதே.
நினைத்த காரியம் நடந்து விட்டது.
நீயும்தான்!
சற்று நேரத்தில் வந்த காகம்...
வாங்க, பசியா இருக்குமே?
எனக்கு ஒண்ணும் வேணாம்
எனக்கும் தான்.
என்ன ஆச்சு உங்களுக்கு?
சபாஷ்... இப்பதான் நல்லாருக்கு.
ஆமா... எனக்கும் அவனைப் பிடிக்கலை
அவனை போகச் சொல்லு. இல்லேன்னா நான் போய்டுவேன்.
குட்டி களா... பொறாமை கூடவே கூடாது. அதனால கஷ்டம்தான் வரும்.
அதை அவனுக்கு சொல்லு.
எல்லாருக்கும் சொல்லி சாப்பிடறதுதான் உனக்கு அழகு!
குரல்தான் இவனுக்கு அழகு.
சபாஷ். அப்படி சொல்லு.
அப்ப எனக்கு
இதை புரிஞ்சுகிட்டு ஒத்துமையா இருக்கணும். சரியா?
வேஸ்டா போயிடுச்சே
சரி. இனி சண்டையே வராது.

சூரியக் கரடி அஸ்ஸாம், பர்மா இந்தோ சீனா, மலேசியாவின் தென் பகுதியிலிருந்து சுமத்ரா - 'போர்னியோ' வரையிலான பகுதியில் காணப்படுகிறது. இதன் மார்பில் பிறைச் சந்திரன் போல அல்லது சூரியன் போல - வெள்ளையாக இருப்பதனால் இதற்கு சூரியக்கரடி என்று பெயர்.

இது, கரடி இனத்திலே சிறியது. இந்த வகைக் கரடிகளில் பெரியவை நாலடி நீளமிருக்கும். நன்கு வளர்ந்த சூரியக் கரடி அறுபது பவுண்டு எடை இருக்கும்; அதேசமயம், நன்கு வளர்ந்த துருவக் கரடி 1600 பவுண்டு எடையிருக்கும் என்பது வியப்புக்குரியது.

மலைப்பகுதிகளிலுள்ள அடர்ந்தநீர்ப் பிடிப்புள்ள காடுகளே இக்கரடிகளின் இருப்பிடம். மரமேறுவதிலும் இவை கில்லாடிகள். நாளின் பெரும் பொழுதை மரங்களின் உச்சியிலேயே கழிக்கும்.

சூடா

சிறு பூச்சிகள், பழங்கள், பறவைகளின் முட்டைகள், பனைமரங்களின் முனைக்கொழுந்துகள், விதைகள் போன்றவற்றை உணவாக உட்கொள்ளும் தன்மை கொண்டது சூரியக்கரடி. கரடிகளுக்கே உரிய குணப்படி இதற்கு தேன் ரொம்பப் பிடிக்கும். கானகத்தின் மரப் பொந்துகளில் தேனீக்களின் அடை(கூடு)களை அழித்துத் தேனைச் சுவைக்கும். தேன் கூட்டிலிருந்து அலையாகக் கிளம்பும் தேனீக்கள் கொட்டுவதை இது லட்சியம் செய்வதில்லை. கரடு முரடான இதன் ரோமம் தேனீகளின் கொட்டலில் (கடி) இருந்து இதைக் காப்பாற்றி விடுகிறது.





ம. விவேக், குட்டம்.







சூரியன்!

சூரியக் கரடிக் குட்டிகள், உருண்டு புரண்டு ஓடிப் பிடித்து மணிக் கணக்கில் விளையாடுவது சுவாரசியமாக இருக்கும். இத்தகைய குட்டிகள் வளர்ந்து பெரிதானால் கோபம் மிகுந்ததாகவும் அபாயமுள்ளதாகவும் மாறிவிடும். அதனால் வளர்ந்த சூரியக் கரடிகளைப் பழக்க முடி யாது.

தொட்டால் சுடாது; ஆனால், அதன் கோபம் சுடும்தானே?!





எங்கள் ஆங்கில ஆசிரியை சுவாரஸ்யமாக வகுப்பெடுப்பதில் வல்லர். சின்னச் சின்னக் கதைகள், சம்பவங்கள் என்று சொல்லி படிப்பதையே சுவையாக்கி விடுவார். ஒருநாள், God is no where என்று போர்டில் எழுதிவிட்டு, எங்களைப் பார்த்துச் சொன்னார்.

''இதுல எதையுமே அழிக்காம, ஒரு

அன்று, ஆய்வுக் கூடத்தில் மாணவர்களுக்கு எச்சரித்துக் கொண்டிருந்தார் ஆசிரியை. ''செருப்பில்லாம இருக்காதீங்க. எது மேலயும் கவனமில்லாம கை வைக்காதீங்க. சுத்திவர HCl, H_2SO_4, HNO_3னு அமிலங்கள் இருக்கு. எல்லாமே அடர்த்தியானது. மேல பட்டா, பொத்தல் விழுந்துடும். ஜாக்கிரதையா இருங்க. விளையாட்டுத்தனமா இருக்கக்கூடாது''

சுற்றிலும் பியூரெட், பிப்பெட், குடுவைகள், சோதனைக் குழாய்கள், ஸ்பிரிட் விளக்கு என்று ஆய்வுக் கூடத்தின் முழுமை புலப்பட்டது. மாணவர்கள் உற்சாகமாக நின்று கொண்டிருந்தனர். 'ஹைட்ரோகுளோரிக் அமிலம், சோடியத்துடன 'வேதி வினை புரியும்போது, சோடியம் குளோரைடும், ஹைட்ரஜனும் அதன் விளைவுகளாகின்றன' என்று விளக்கிக் கொண்டிருந்தார். அப்படிச் சொல்லும்போது, ஒரு மாணவன் மட்டும் 'ஆஹா' என்று சொல்லிக் கொண்டிருந்தான். அடுத்து செய்முறைப் பயிற்சி ஆரம்பித்தது. அப்போது, டைபிள் முன்பு வரிசையாக நின்று கொண்டிருந்த மாணவர்களிடம், ''ஆய்வு செய்வது என்றால், பொருளை அதிகமாகப் பயன்படுத்துவது என்று அர்த்தமில்லை. சரியான அளவில் பயன்படுத்துவது என்று புரிந்து கொள்ளுங்கள். எனவே, வேதியியல் உப்புகளை குறைவாகப் பயன்படுத்துங்கள்'' என்று கூறினார்.

உடனே அந்த மாணவன் வேகமாக, ''மேடம், அதிகமாய் பயன்படுத்தினால் என்ன ஆகும்?'' என்றான். அதைக் கவனித்த ஆசிரியை, ''ம்... அதிகமாகப் பயன்படுத்தினால் உப்பு காலியாகும்.

எழுத்தை இடம் மாத்தினா, அர்த்தமே மாறிடும். அது என்னன்னு தெரியுமா? சொல்லுங்க பார்க்கலாம்.''

நாங்கள் யோசிக்க ஆரம்பித்தோம். இதற்கு முன்பே இதைக் கேட்டிருந்தால், சட்டென்று எனக்கு நினைவு வந்துவிட்டது. உடனே எழுந்து சொன்னேன்.

''மேடம், no where என்பதில் உள்ள 'w'வை, 'no' என்பதுடன் சேர்த்தால் பொருள் மாறிவிடும். 'கடவுள் எங்கும் இல்லை' என்ற பொருள், 'கடவுள் இங்கே இருக்கிறார்' என்று ஆகிவிடும்.

''வெரிகுட்'' என்று பாராட்டிய ஆசிரியை, அடுத்து கேட்டார் :

''இது யாருடைய வாழ்வில் நடந்த சம்பவம் தெரியுமா?''

''தெரியாது'' என்றவுடன், அவரே சொன்னார்.

''இது சுவாமி விவேகானந்தர் வாழ்வில் நடந்த சம்பவம் இது. சரி; விவேகானந்தரைப் பற்றி உங்களுக்கு ஏதாவது தெரியுமா?''

அதைக் கேட்ட மாணவர்கள் பலரும் மௌனிக்க, ஒரு மாணவன் மட்டும் அவசரமாக எழுந்து சொன்னான்.

''மேடம், அவர் காவிக்கலர்ல துணி போர்த்திருப்பார். தலைல முண்டாசு மாதிரி சுத்திருப்பார். கையை மடிச்சுக் கட்டின மாதிரி நிப்பார்'' என்று படத்தில் பார்த்த விஷயங்களைச் சொன்னான். அதைக் கேட்டு அனைவருமே சிரித்து விட்டோம். ஆனால், ஆசிரியை 'ஏன் சிரிக்கிறீர்கள்? அவனுக்கு தெரிந்ததை சொன்னான். அதுல தப்பில்லை' என்றார் நிதானமாக.

- பி.சர்வேஸ்வரன், உ. எண் 456, மதுரை


அவ்வளவுதான்' என்றார் பளிச் சென்று. அதைக் கேட்ட மாணவர்கள் அனைவரும் கலகலவென்று நகைத்தனர். கேள்வி கேட்ட மாணவனோ அசடு வழிய நின்றான்.

- மு.அருண்குமார், உ. எண் 670, ஓசூர்

அதிகமானால் என்ன ஆகும்?



சுட்டீஸ் கைவண்ணம்!












கண்ணாமூச்சி

கொடுக்கப்பட்டுள்ள எண்களை இணைத்து ஒளிந்திருப்பது என்ன என்று கண்டுபிடியுங்கள்.



புள்ளிகளை இணையுங்கள்

தாத்தாவின்

எலி தின்னும் பூரான்

உலகின் மிகப்பெரிய பூரான் இனம் தென் அமெரிக்காவில் காணப் படுகிறது. ஒரு அடி நீளத் துக்கு இது வளரும். இந்தப் பூரானின் முக்கிய உணவு என்ன தெரியுமா? எலி, பல்லி, மற்றும் பூச்சிகள்.



தேங்காய் பறிக்க குரங்கு


மலேசிய நாட்டின் பினாங்கு நகரப் பகுதியில் குரங்குகளைத் தேங்காய் பறிக்கப் பழக்கி இருக்கிறார்கள். இளநீருக்கும், முற்றிய தேங்காய்க்கும் வித்தியாச மறிந்து பறிக்கின்றன இந்தக் குரங்குகள். இக்குரங்கள் தேங்காய் பறிப்பது வியப் பில்லை; வித்தியாசம் அறிந்து பறிப் பதுதான் ஆச்சரியம்.

- சு.அபிஷேக், உ. எண் 518

சிமெண்ட்

1824ல் ஜோசப் ஆஸ்பிடின் என்பவர் முதன் முதலாக சிமெண்ட்டைக் கண்டுபிடித்தார். இவர் இங்கிலாந்தைச் சேர்ந்த கொத்தனார்.

சுண்ணாம்புக் கல்லும், களிமண்ணும் கலந்த கலவையை, ஒரு குறிப்பிட்ட வெப்ப நிலைக்கு சூடாக்கினால் கிடைப்பதே சிமெண்ட். இத்துடன் குறைந்த அளவு தண்ணீர் கலந்தால் சில மணி நேரங்களுக்குப் பின்னர் இது கடினமான உறுதியான பொருளாகிறது. இதை போர்ட்லெண்டு சிமெண்ட் என்பர். இதற்கு காரணம்



இங்கிலாந்தில் 'போர்ட்லேண்ட் பாறைகள்' உள்ளன. இவற்றைப் போன்றே இந்த சிமெண்டும் உறுதியாக இருந்ததால் இப்படி அழைத்தனர்.

- ஜி.எஸ்.ஸ்ரீமதி, ஒன்பதாம் வகுப்பு, சாரதா மேல்நிலைப் பள்ளி, கோபி


சிறிய புத்தகம்

உலகிலேயே மிகச் சிறிய புத்தகம் என்ற பெயருடன், ரோம் அருங்காட்சியகத்தில் ஒரு புத்தகம் வைக்கப்பட்டுள்ளது. 1889ஆம் ஆண்டு அச்சிடப்பட்ட இந்த நூலைப் பிரித்தால், ஓரங்குல அளவைவிட, மிகவும் சிறியதாக உள்ளது. கூட்டல், கழித்தல் வகையில் கணக்குக் கற்றுக் கொள்ள உருவாக்கப்பட்டது, இந்நூல். அக்காலத்திலேயே அச்சிடப்பட்ட உடனே, விற்றுத் தீர்ந்து விட்டதாம். கிட்டத்தட்ட நூறு ஆண்டுகளுக்கு மேலாகியும், இந்நூல் சிலரிடம் இன்னமும் தலைமுறை நினைவுச் சின்னமாக இருந்து வருகிறது. அதாவது, தாத்தாவின் கணக்குப் புத்தகம்!

- மு.அருண்குமார், உ. எண் 670, ஓசூர்

கணக்குப் புத்தகம்!






காந்தத் துளிகள்...

காந்தம் மெக்னீசியா என்ற இடத்தில் கண்டு பிடிக்கப்பட்டது. புவியின் காந்த அச்சு 17 டிகிரி சாய்ந்துள்ளது. இரும்பு, நிக்கல், கோபால்ட் ஆகியவை ஃபெர்ரோ காந்தங்கள், ஆக்சிஜன் பாரா காந்தத் தன்மை கொண்டது. மின் காந்தங்கள் மின்சார அழைப்பு மணியில் பயன்படுகின்றன. காந்தப் பொருள் தன் காந்தத் தன்மையை இழக்கும் வெப்பநிலை கியூரிப் புள்ளி எனப்படும். இரும்பின் கியூரிப் புள்ளி 700 டிகிரி செல்ஸியஸ். மின்காந்தத் தூண்டலைக் கண்டறிந்தவர் ஓயர்ஸ்டட்.

- ஆர்.மோகன், உறுப்பினர் எண் 536, கும்மிடிப்பூண்டி



கடிக்காத

I. 1. கடிவாளம் போட்டால் காலிலே கிடக்கும் - அது என்ன?

2. அம்பலத்தில் ஆடும் அழகுக் கண்ணுக்கு அங்கம் முழுவதும் தங்கக் கண்ணாடி - அது என்ன?

3. கிண்ணி போலப் பூப்பூக்கும், கிள்ளி முடிக்க உதவாது - அது என்ன?

4. அடிமேல் அடி வாங்கி, அனைவரையும் சொக்க வைக்கும் - அது என்ன?

5. காலையில் வந்த விருந்தாளி, மாலையானதும் மறைந்துவிட்டான் - அவன் யார்?

- ஆர்.அம்பிகா, மதுரை

II. 1. சிவப்பு நிறக் காளை; நீரென்றால் பதுங்கும் காளை - அது என்ன?

2. முல்லைத் தோட்டத்தில் கறுப்பு முத்து - அது என்ன?

- பி.சர்வேஸ்வரன்,
உ. எண் 456, மதுரை

III. 1. வல்லவனுக்கு வாலிலும் ஆயுதம் - அவன் யார்?

2. காட்டில் கிடைத்த கட்டை, கான மழை பொழியும் - அது என்ன?

- எஸ்.வினித் மாதவன்,
உறுப்பினர் எண் 1196,
மதுரை

IV. 1. ஒட்டு வீட்டுக்காரன் ஓடிப்போக மாட்டான் - அவன் யார்?

2. பச்சை வீட்டுக்கு சிவப்பு வாசல், அது என்ன?

3.தாளைக் கொடுத்தால் தின்னும்; தண்ணீரை குடித்தால் மடியும் - அது என்ன?

4. பெட்டியைத் திறந்தால் பூட்ட முடியாது - அது என்ன?

5. வட்ட வட்ட பாய்; வாழ்வு தரும் பாய்; ஊரெல்லாம் சுற்றும் பாய்; ஒவ்வொருவரும் விரும்பும் பாய், அது என்ன பாய்?

- உ.ரியாஷ், கீழக்கரை



V. 1. என் குதிரை கறுப்பு குதிரை - குளிப்பாட்டினால் வெளுப்புக் குதிரை - அது என்ன?

2. ஒற்றை கால் கோழிக்கு வயிறு நிறைய முட்டை - அது என்ன?

- எஸ்.கிருத்திகா, ஏழாம் வகுப்பு, விவேகானந்தா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, சீர்காழி



VI. 1.ஒரு துரைக்கு இரண்டு தொப்பி - அது என்ன?

2. ஒட்டுத் திண்ணையில் தடுக்குப் போட்டேன். எடுக்க முடியவில்லை - அது என்ன?

3. ஒன்பது பிள்ளைக்கு ஒரே குடுமி - அது என்ன?

- ந.பிருந்தா, உ. எண் 1098, ஏழாம் வகுப்பு, ராஜ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, மயிலாடுதுறை

VII. 1.பல் இருக்கும் கடிக்காது. கப் இருக்கும் தேனீர் குடிக்க உதவாது.

விடுகதைகள்

நீரில் மிதக்கும்; மரக்கட்டையும் இல்லை பயணம் செய்ய உதவும்; படகும் அல்ல - அது என்ன?

2. தமிழ் மாதமும் ஆங்கில மாதமும் சேர்ந்த என்னை, உலக மக்கள் எல்லாரும் போற்றுவர் - நான் யார்?

3. குவிலென்ஸ் இருக்கும்; காமிரா இல்லை. திரை இருக்கும்; தியேட்டர் இல்லை. ரசம் இருக்கும். குடிக்க முடியாது - அது என்ன?

4.ஐந்தெழுத்து ஊரின் பெயர். முதல் மூன்றெழுத்தும் பறவையைக் குறிக்கும். கடைசி இரு எழுத்துகளும் சிகரத்தை உடையது. முதல் எழுத்தும் கடைசி எழுத்தும் சேர்ந்தால், திறமையைக் குறிக்கும். மூன்றாம் எழுத்தும் கடைசி எழுத்தும் சேர்ந்தால், வாழை ஒரு முறை ஈனும் - அது எந்த ஊர்?

- வி.பி. மதிமலர், உறுப்பினர் எண் 77, சென்னை

விடைகள்:



I. 1.செருப்பு, 2.மயில், 3.ஊமத்தம்பூ, 4.மத்தளம், 5.சூரியன்
II. 1. நெருப்பு, 2.கண்
III. 1.தேள், 2.மூங்கில்
IV. 1.ஆமை, 2.கிளி, 3.நெருப்பு, 4.தேங்காய், 5.ரூபாய்
V. 1. உளுந்து, 2.மிளகாய்
VI. 1.வறுத்த பட்டாணி, 2.கோலம், 3.பூண்டு
VII.1. கப்பல், 2.மேதை, 3. கண், 4.கழுகுமலை



'ஸீன்' நதிக்கரையில் அமைந்துள்ள பெருநகரம் பாரீஸ். வல்லரசு நாடுகளில் ஒன்றான பிரான்ஸின் தலைநகரம் இது. உலகின் பிரதானமான வணிகம் மற்றும் பண்பாட்டு நிலையமாகத் திகழ்கிறது பாரீஸ். 45 மில்லியனுக்கு மேற்பட்ட சுற்றுலாப் பயணிகள் ஆண்டுதோறும் பாரிஸுக்கு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. பாரீஸின் முக்கியமான சுற்றுலா ஈர்ப்பாக அமைந்துள்ளது ஈஃபில் டவர்!

பாரீஸின்

- பிரான்சில் 1889-ல் நடந்த ஃபிரெஞ்சுப் புரட்சி ஆண்டு விழா கண்காட்சிக்காக, ஒரு காட்சிப் பொருளாக வடிவமைக்கப்பட்டதுதான் இந்த ஈஃபிள் கோபுரம்.

- கஸ்டாவ் ஈஃபிள் மற்றும் ச்சேய் ஆகிய இரண்டு பேர், அரசுடன் செய்து கொண்ட கட்டுமான ஒப்பந்தத்தின் படி, மௌரிஸ் கோச்லின் மற்றும் எமில் நோகைர் என்ற இரண்டு பொறியாளர்கள் இதனைக் கட்டினர்.

- இதன் முதன்மை வடிவமைப்பாளர் ஸ்டீஃபன் சாவெஸ்டர். இதன் வடிவமைப்பு தொடர்பாக 1884-ல் ஆராயத் தொடங்கி, 1887-ல் கட்டுமானப் பணிகளைத் தொடங்கினார்.

- 2 ஆண்டுகள் 2 மாதங்கள் 5 நாட்கள் என்று, குறுகிய காலத்தில்

நினைவுச்சின்னம்



அடையாளம்!

300 பணியாளர்களின் உழைப்பில் உருவான அதிசயம் இது.

✸ மார்ச் 31, 1889-ல் கட்டி முடிக்கப்பட்டு இதன் உச்சியில் ஃபிரான்சு நாட்டின் கொடி பறக்க விடப்பட்டது. இதன் எடை 10,100 டன். இதில் பெயிண்ட் மட்டுமே 40 டன்கள்!


✸ இதற்கு 7,300 டன் எடையுள்ள 18,038 எஃகுத் துண்டுகள் மற்றும் 25,00,000 நட்டுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

✸ இதன் அடித்தளப் பரப்பு 10,281.96 ச.மீ. இதன் ஒட்டு மொத்த உயரம் 324 மீ. இதன் உச்சியை அடைய 1665 படிகள் ஏற வேண்டும்.

✸ இதனைக் கட்டி முடிக்க ஆன செலவு, 78 லட்சம் ஃபிராங்க்ஸ்.



ஆர்.ரம்யா,
பத்தாம் வகுப்பு,
காமராஜ் மேல்நிலைப்பள்ளி,
நம்பியூர்.



கெட்டிக்கார சோமு!

கதை: எஸ். தணிகை வேல்,
உ.எண்:762,
சி.எஸ்.எம் நகராட்சி
மேனிலைப்பள்ளி,
காஞ்சிபுரம்.
படம்: சொக்கலிங்கம்






பலூனை காற்றில் விட...
ஏய்... பிடி.. பிடி..
ஆ! பறந்துடிச்சு.
மற்றவர்கள் பின்தங்க...
தனியே வந்த சோமு...
ஆ! யாரோ வராங்க.
நகையோட சின்னப் பையன்! லக்குதான்.
அவன், திருடன் கபாலி.
பயந்த சோமுவிடம்...
ஏன் இங்க நிக்கறே.
வைரமாலை கிணத்துல விழுந்துடுச்சு.
சரி, நீ வீட்டுக்கு போ. நான் எடுத்துட்டு வரேன்.
நிஜமா?
உடைகளை கழற்றிவிட்டு...
சரி; நீ போ.
கிணற்றினுள் இறங்க...
வைரமாலை வீட்டில் இருக்கு. பத்திரமா மேல வாங்க.
வீட்டிலா?
ஆமாம். நான் போறேன்.
அடச்சே! சின்னப் பையன்கிட்டே ஏமாந்துட்டோமே.



எரிமலையில்

✱ பிறந்த குழந்தைகளுக்கு 2 மாதங்கள் வரைக்கும் கறுப்பு, வெள்ளை ஆகிய இரு வண்ணங்கள் மட்டுமே தெரியும்.

✱ தங்கத்தைப் போல 100 மடங்கு மதிப்பு மிக்க உலோகம் பிளாட்டினம்.

✱ ஒரு யூனிட் ரத்தம் என்பது 350 மில்லி லிட்டர் கொண்ட பிளாஸ்டிக் பைகளில் சேமிக்கும் அளவு.

✱ கழுகு தன் இறக்கையை ஒரு முறைகூட அசைக்காமல் ஆறு மைல் தூரம் வரை பறக்கும் திறன் கொண்டது.

✱ ஒரு மீட்டர் பட்டு நூல் உற்பத்தி செய்ய, 1200 பட்டுப் புழுக்கள் தேவை.

✱ ஆப்ரகாம் லிங்கன் தன்னுடைய வாழ்க்கையில் 54 தடவை தோல்விகளைச் சந்தித்தார். தனது விடாமுயற்சியின் விளைவாக, அமெரிக்க ஜனாதிபதியாக ஆனவர்.

- எஸ்.வினீத் மாதவன்,

மதுரை

✱ இமயமலையில் உள்ளது போலவே, வெந்நீர் ஊற்றுகள் அதிகம் உள்ள மலைகள் ஆஸ்திரேலியாவில் உள்ளன.

✱ ஐஸ்லாந்தின் நில அமைப்பு, எரிமலை வெடித்துச் சிதறி, இறுகி உருவான எரிமலைப் பாறைகளால் ஆனது.


✱ 'பாட்லியான்' என்பது புகழ்பெற்ற ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழக நூலகத்தின் பெயர்.

✱ 13ஆம் எண்ணை அதிர்ஷ்ட எண்ணாகக் கருதும் நாடு இத்தாலி.

- பி.சர்வேஸ்வரன்,

மதுரை

'ஐஸ்'லாந்து!



✱ வானத்தில் ஆரஞ்சு நிறத்தில் தெரியும் கிரகம் செவ்வாய்

✱ மிக அதிகமான பிரகாசத்துடன் திகழும் சூரியனை, வெறும் கண்களால் பார்ப்பது தீமையளிக்கக் கூடியது.

✱ சூரியனில் ஹீலியம், ஹைட்ரஜன் ஆகிய வாயுக்கள் உள்ளன.

✱ சூரிய ஒளி பூமியை அடைய எடுத்துக் கொள்ளும் நேரம் 8 நிமிடங்கள்

✱ சந்திரனில் உள்ள உயரமான மலை லிப்னிட்ஸ் 10,600 மீட்டர்.

- உ.சுல்தானா, கீழக்கரை

✱ சுண்டெலியின் இதயம் நிமிடத்துக்கு 300 முறை துடிக்கும்.

✱ காலில் காதுள்ள உயிரினம் வெட்டுக்கிளி.

✱ டெல்லியின் பழங்காலப் பெயர் அஸ்தினா புரம்

✱ வண்டு பறக்கும்போது அதன் இறக்கைகள் ஒரு விநாடிக்கு 700 தடவை அடித்து கொள்கின்றன.

✱ தேள், உணவு ஏதும் உண்ணாமலே ஓராண்டு வரை உயிரோடு வாழும்.

✱ ஒரு கண்ணால் ஒரு இடத்தையும், மறு கண்ணால் வேறொரு இடத்தையும் காணும் திறன் கொண்டது பச்சோந்தி.


✱ லைப்ரரி என்ற சொல், லத்தீன் மொழியிலிருந்து உருவானதாகும்.

✱ துருக்கி நாட்டின் நாணயம் 'லிரா' எனப் படும்.

- பு.இந்துமதி,
உ. எண் 290,
காஞ்சிபுரம்







விடைகள் பக்கம்

I. தலைகீழாகப் பார்த்தாலும் ஒரே எண்ணாகக் கருதப்படுவதுதான் இதன் சிறப்பு.

II. இந்த இரு எண்களிலும் சேர்த்து 1 முதல் 9 வரையுள்ள இலக்கங்கள் உள்ளன. முதல் எண்ணைப் போல், இரண்டாவது எண் இருமடங்காக இருப்பது ஆச்சர்யம்!



III. 1.சின், 2.சிகாகோ, 3.சிவகாசி, 4.சித்திரகாரப்புலி, 5.சிதம்பரம், 6.சிவாஜிகணேசன், 7.சிலப்பதிகாரம்

IV. 6

V. 12, 96

VI. 1.விநோபா, 2.வியன்னா, 3.விப்ஜியார், 4.விஷ்ணுசர்மா, 5.வில்லிவாக்கம், 6.விருத்தாச்சலம், 7.விசாகப்பட்டினம், 8.விஸ்வநாதன் ஆனந்த், 9.விஜயலட்சுமிபண்டிட்

VII. 1.சிறுத்தை, 2.சிறுபஞ்சமூலம், 3.சிவவாக்கியார், 4.சிவ பாதசேகரன், 5.சித்திராங்கதை

சரியான்னு பாருங்க!

VIII. 2 (2+ 2 = 4; 2 x 2 = 4)

IX. 1.அதிகாரம், 2.அகங்காரம், 3.நமஸ்காரம், 4.அலங்காரம், 5.சிங்காரம்

வித்தியாசங்களைக் கண்டுபிடி!

1.கொக்கு, 2.வண்டு, 3.நந்தை, 4. இலை, 5.கல்

அன்பு நண்பர்களே...

'கோகுலம் டைஜஸ்ட்' பகுதிக்கு கதை, கவிதை, அறிவியல் துணுக்குகள், புதிர்கள், சுற்றுலா அனுபவம், பள்ளி மற்றும் வீட்டில் நடந்த பல்சுவை அனுபவங்களை எழுதியனுப்புங்கள். படைப்புகளுடன் உங்கள் பெயர், வகுப்பு, பள்ளி, வீட்டு முகவரியைத் தெளிவாக குறிப்பிட வேண்டும். அனுப்ப வேண்டிய முகவரி :

ஆசிரியர் - கோகுலம்
(டைஜஸ்ட் பகுதி)
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 032

படைப்புகளை அனுப்புங்கள்; பங்கேற்று அசத்துங்கள்!

தெரியுமா...

✱ இவர் உலகின் மிகப் புகழ் பெற்ற இயற்பியல் விஞ்ஞானி

✱ இவர் 'பிரின்ஸிபியா மேத்த மேட்டிகா' என்னும் நூலை எழுதி யுள்ளார்.

✱ இவர் ஜி.டபுள்யூ. லெய்ப்னிஸ் என்பவருடன் சேர்ந்து கால்குலஸ்ஸை உருவாக்கினார்.

✱ சூரிய ஒளி ஏழு வண்ணங்களைக் கொண்டது என்பதை கண்டறிந்தவர் இவரே.

✱ பொருளின் இயக்கம் பற்றிய இவரது மூன்று விதிகள், மிகவும் பிரபலமானவை.

✱ பொருட்கள் நிலையாக இயங்கு வதற்கான காரணத்தைக் கண்டறிந்த வரும் இவரே.


✱ இவர் 'ஒவ்வொரு விசைக் கும் சமமான எதிர்விசை உள்ளது' என்று கூறியுள்ளார்.

✱ இவர் பெயரால், விசைக்கான எஸ் 1 அலகு அமைந்தது.

✱ ஈர்ப்பு விசையை முதன் முதலில் கண்டுப்பிடித்தவர் இவரே.

✱ இவரின் பெரிய கண்டு பிடிப்புக்கு உதவியது, ஓர் ஆப்பிள் பழம்.


– உ.ரியாஷ், கீழக்கரை



ஆப்பிள் காட்டிய வழி!



என்ன தெரியும்?





பூகோளம் சுழலக் காண்பது போல,
தன்னை சுழற்றிக் கொள்ளும்
இயந்திரத்திற்கு
என்ன தெரியும் -

சிவந்த கரங்களைப் பற்றி...?

பூத்துக் குலுங்கும் மலர்களுக்கு
என்ன தெரியும் -

வேரின் வேதனைப் பற்றி...?

செம்பிழம்பினை உமிழும்
தணலுக்கு
என்ன தெரியும் -

தளிர்விடும் பிஞ்சுகளைப் பற்றி...?

பெருகி வரும் ஆழிப் பேரலைக்கு
என்ன தெரியும் -

பெரும் சோகத்தைப் பற்றி...?

சாவியிட்ட பொம்மைகளாய்த் திரியும்
உருவங்களுக்கு
என்ன தெரியும் -

மனித நேயத்தைப் பற்றி...?!

- எஸ்.பி. மதிவாணன், பத்தாம் வகுப்பு,
காமராஜ் மேல்நிலைப் பள்ளி, நம்பியூர்



விளையாடிக் கற்பாய்!

மாலை நேரம் விளையாட
ஏற்ற தருணம்!
மதிய வெயில் ஆகாது; கூடாத் தருணம்!

காலை நேரம் விடுமுறையில்
விளையாடலாம் - நீ
காலத்தே விளையாடி வீடு திரும்பலாம்!

விளையாட்டால் நோய் பிணிகள்
நமை அண்டாது!
வேளைக்குப் பசி எடுக்கும்!
உடலும் தேறும்!

விளையாட்டே கல்விக்கும்
பக்கத்தோழன்?
கட்டாயம் விளையாடிக் கற்பாய்
நாளும்!

கபடி, ஹாக்கி, கால்பந்து,
கிரிக்கெட் என்று,
கணக்கில்லா விளையாட்டு
உலகில் உண்டு!
தவறாமல் இதில் ஒன்றைத்
தேர்வு செய்து - நீ
தாவி ஓடி விளையாடி வியர்வை சிந்து!



தினம் தோறும் உடல் வியர்க்க
விளையாடணும்!

விளையாட்டால்
ஆரோக்கியம்
நிதம் கூடணும்!

மனதோடு மூளையினை
சுறுசுறுப்பாக்கும்!

மங்காத
நினைவாற்றல்
தன்னை ஊக்கும்!

- கல்யாணி பாலு,
புதுக்கோட்டை



இன்பம்!

மலரே மலரே தாமரையே
மலரின் அரசி தாமரையே
அருளை நல்கும் இறைவனையே
அடைவாய்; அழகாய் மலர்வாயே
சேற்றில் நீயும் பிறந்தாலும்
சேற்றின் தன்மையை சேராயே
கல்வியின் நாயகி உன்மடியில்!
கருமால் தேவியும் உன்மடியில்!
இரவியின் ஒளியில் நீ மலர்வாய்
இருளின் அமைதியில் நீ உறைவாய்
உன்னைக் கண்டால் அனைவருக்கும்
உண்மை இன்பம் உண்டாகும்.

**- எஸ்.தீபக்குமார், ஆறாம் வகுப்பு,
கமலா சுப்ரமணியம் மேல்நிலைப்
பள்ளி, தஞ்சாவூர்**

நடை

பிரிட்டனிலுள்ள லீட்ஸ் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த பொறியாளர்கள், வேகமாக நடக்கும்போது அல்லது காலை மடக்கும்போது கிடைக்கின்ற சக்தியை வைத்து மின்சாரம் தயாரிக்கும் முயற்சியில் இறங்கியுள்ளனர். பொதுவாக இராணுவ வீரர்கள் தங்களின் ஆறு மணி நேரக் காவல் பணியின்போது 75 கிலோ எடையுள்ள பொருட்களைச் சுமந்து செல்ல வேண்டியுள்ளதாம். இதில் அவர்கள் சுமக்கும் பேட்டரியின் எடை மட்டும் 10 கிலோ. விஞ்ஞானிகள் சூரிய ஒளி மற்றும் உடலில் உள்ள வெப்பத்தைக் கொண்டு மின்சாரம் உருவாக்க முடியும் என்கின்றனர். இதன் மூலம் பேட்டரி சுமக்காத இராணுவ வீரர்களை எதிர்காலத்தில் பார்க்கலாம் என்னும் கருத்தையும் தெரிவித்துள்ளனர். கரண்டை உடம்பிலே உருவாக்கிட்டா, கரண்ட் பில் கட்ட வேண்டியதில்லை. ஐ! ஜாலி! ஆனா... ஷாக் அடிக்குமா?



விண்வெளிக்குச் செல்லும் சீனர்களுக்கு 100 உடற்தகுதிகள் இருக்கான்னு பரிசோதனை பண்ண வேண்டும் எனச் சீன மக்கள் விடுதலை இராணுவப் படையைச் சேர்ந்த அதிகாரி 'ஷி பிங் பிங்' தெரிவித்துள்ளார். சில சாம்பிள் கேள்விகள் இதோ... 'பல் சொத்தை இருக்கக் கூடாது. வாய் துர்நாற்றம் வீசக் கூடாது. உடம்பில் தழும்புகள் இருக்கக் கூடாது. மூன்று தலைமுறைகளாக வீட்டில் யாருக்கும் பெரிய வியாதிகள் இருந்திருக்கக்கூடாது. மாத்திரை அலர்ஜி இருந்தாலும் 'நோ' தான். அப்புறம் ஒரு கண்டிஷன். மூக்கு ஒழுகக் கூடாதாம்!? சீன விண்வெளி வீரர்களை 'டெய்கோனாட்' என அழைக்கின்றனர். அப்டின்னா, டெய்கோனாட்களுக்கு கைக்குட்டை தேவைப்படாது. ஏன்? அவங்களுக்குதான் மூக்கு ஒழுகாதே!



எலிக்குப் புதுப் பல்

ஜப்பானைச் சேர்ந்த பேராசிரியர் டகாஷி டுசூஜி உயிர்ப் பொறியியல்

முனைவர். ஆசுரா




மின்சாரம்!

தொழில்நுட்பம் மூலமாக புதிய உறுப்புகளை உருவாக்க முடியும் என்னும் கருத்தைத் தெரிவித்துள்ளார். உடலில் உள்ள ஸ்டெம் செல்கள் அல்லது ஜெர்ம் செல்களை எடுத்து உயிர்ப் பொறியியல் மூலம் சாத்தியமாக்கலாம் எனத் தெரிவித்துள்ளார். பற்களை வளர வைக்கின்ற திசுக்களைச் செல்களிடமிருந்து எடுத்து ஒரு ஜெர்ம்-ஐ உருவாக்கியுள்ளனர். இது ஒரு எலியின் தாடை எலும்பில் செலுத்தப்பட்டது. அங்கே, இந்த ஜெர்ம்கள் புதிய பற்களாக முளைப்பதைக் கண்டனர். இந்தப் பற்கள் பழைய பற்களைப் போல வலிமையாக இருப்பதாகத் தெரிவித்துள்ளனர். அப்ப, இனி பல்லும் போகாது; சொல்லும் போகாது. பழமொழி தப்பாயிடுமே!



நாய்க்குட்டிக்கு அறுவைச் சிகிச்சை

தான் ஆசையா வளர்க்கிற நாய்க்குட்டி 'பெட்டி'க்கு முடியலைன்னு இங்கிலாந்தைச் சேர்ந்த 'எம்மா வாட்சன்' டாக்டர்கிட்ட தூக்கிட்டு ஓடியிருக்காங்க. ஏன்னு தெரியுமா? எட்டு மாசக் குட்டி 'பெட்டி' தொடர்ந்து வாந்தி எடுத்துக்கிட்டே இருந்துச்சு. அங்கே எக்ஸ்ரே எடுத்துப் பார்த்தாங்க. அதில பெட்டியோட குடல் வரைக்கும் ஏதோ ஒரு பொருள் நீளமாகக் குத்திகிட்டு இருக்கிறதைக் கண்டுபிடிச்சாங்க. உடனே, அறுவைச் சிகிச்சை செய்து பெட்டியின் வயிற்றில் இருந்த 10.5 இஞ்ச் நீளமுள்ள பிளாஸ்டிக் துண்டை வெளியே எடுத்தார்கள். இதுல அதிசயம் என்னன்னா அதோட உடம்போட நீளமும் அவ்வளவுதான். பெட்டி இப்போ வீட்டுல துள்ளி விளையாடிக்கிட்டு இருக்கு.





வெள்ளிக்

"**தா**த்தா... இன்னிக்கு என்ன கதை சொல்லப் போறீங்க?" - கூடி இருந்த குழந்தைகள் கேட்டன.

"இன்னைக்கு விறகு வெட்டி பாலு பற்றிய கதை" என்று ஆரம்பித்தார் அவர்.

"பொன்னூர் பக்கத்திலே ஒரு காடு இருந்தது. அதன் நடுவிலே ஒரு பெரிய மரம். அதிலே நிறைய பறவைகள்



கூடு கட்டி வாழ்ந்தன. அதில் ஒரு தேவதையும் வசித்து வந்தது.

அந்த ஊர்லே பாலு என்ற விறகு வெட்டி இருந்தான். அவன் மிகவும் தைரியசாலி. அவன் தனியாக அந்தக் காட்டுக்குள் புகுந்து விறகு வெட்டி, கட்டி வைத்துவிட்டு, அந்தப் பெரிய மரத்தடியில் தூங்கிவிட்டு மாலையில் ஊருக்குள் விறகை கொண்டு சென்று விற்றுப் பிழைப்பு நடத்தி வந்தான்.

ஒருநாள் அந்த மரத்தில் வசித்த பறவைகள் தேவதையிடம் முறையிட்டன : "இவன் இப்படியே கொஞ்சம் கொஞ்சமாகக் காட்டை அழித்து வருகிறான். மரங்கள் எல்லாம் குறைந்துகொண்டே வருகின்றன. கொஞ்ச நாள் போனால் இந்த மரத்தையும் விட்டு வைக்க மாட்டான். இதற்கு நீதான் ஏதாவது வழி செய்ய வேண்டும்" தேவதையும் கொஞ்சம் யோசித்து, "சரி" என்றது.

மறுநாள்... வழக்கம்போல் பாலு விறகு வெட்டிக் கட்டி வைத்துவிட்டு,

அ. வேல்முருகன்,
உ.எண்:951,
பத்தாம் வகுப்பு,
காமராஜ் மேல்நிலைப்பள்ளி,
நம்பியூர்.



மரத்தடியில் வந்து படுத்துக்கொண்டான். ஆழ்ந்து தூங்க ஆரம்பித்தான். அப்போது தேவதை அவன் கனவில் தோன்றி, ''பாலு, நீ எத்தனை நாள்தான் இப்படிக் கஷ்டப்படப் போகிறாய்? உனக்கு நல்ல நேரம் பிறந்திருக்கு. நான் சொல்கிற மாதிரி நடந்தால் நீ செல்வந்தனாகலாம். என்ன சொல் கிறாய்?'' என்றது.

பாலுவும் கனவில், ''சரி, சொல்'' என்றான்.

''இந்த மரத்தின் அடியில் இலை தழைகளை நன்கு கூட்டி சுத்தப்படுத்தித் தேடிப் பார். ஒரு வெள்ளிக்காசு கிடைக்கும். அந்த இடத்தில் நன்கு ஆழமாகத் தோண்டி, ஒரு மரக்கன்றை நடு. பிறகு தண்ணீர் விடு. அது துளிர்விடும். உடனே அந்த இடத்தில் இருந்து பத்தடி தூரத்தில் தேடிப் பார்.

காசு!

இன்னொரு வெள்ளிக்காசு கிடைக்கும். அங்கும் குழி தோண்டி ஒரு மரக்கன்றை நடு. அது துளிர்விட்டதும், இன்னொரு 10 அடி நகர்ந்து தேடு. இப்படியே ஓராண்டு காலம் உனக்கு வெள்ளிக்காசு கிடைக்கும். அந்த இடங்களில் எல்லாம் மரங்களை நடு. ஆனால், ஒரு நிபந்தனை. இந்த மரங்களை நன்கு பராமரித்து வளர்க்க வேண்டும். வெட்டக்கூடாது' என்று சொல்லி மறைந்தது.


கண் விழித்த பாலு முதலில் அதை நம்ப வில்லை. 'ச்சீ கனவு' என்று நினைத்தாலும் ஆசை அவனை விடவில்லை.

மரத்தடியில் இருந்த இலை தழைகளைக் கூட்டி விட்டு சுற்றிலும் தேடினான். என்ன ஆச்சர்யம்! ஒரு இடத்தில் ஒரு வெள்ளிக்காசு கிடக்க, மகிழ்ச்சியில் துள்ளினான். உடனே தேவதை சொன்னபடி காசு கிடைத்த இடத்தில் தோண்டி, காட்டில் ஒரு மரக் கன்றைத் தேடிப் பிடுங்கி வந்து அந்தக் குழியில் நட்டு தண்ணீர் ஊற்றினான்.

மறுநாள் வந்து பார்க்கையில் மரக் கன்று துளிர் விட்டிருந்தது. உடனே அங்கிருந்து ஒரு பத்தடி நகர்ந்து சென்று தேடினான். அங்கும் ஒரு வெள்ளிக்காசு கிடைத்தது. அதனால், அவன் மரம் வெட்டுவதை கைவிட்டான். நிறைய மரங்கள் நட்டு பெரிய காட்டை உரு வாக்கினான். பெரும் செல்வந்தனாள். பறவைகளும் மகிழ்ந்தன.

''மரமிருந்தா வளம் பெருகும்' என்பது உண்மையாயிற்று. வனம் செழித்ததால் மழை பொழிந்து, பாலு வின் ஊரில் வளம் கொழித்தது.

அதுபோல, நாமும் மரங்களை வளர்க்க வேண்டும்; பாதுகாக்க வேண்டும்'' என்று முடித்தார் தாத்தா. குழந்தைகள் 'சரி' தாத்தா'' என்றனர் கோரஸாக! ●



எல்லாமே சிரிப்புதான்!


மசக்கலி... மசக்கலி... இது 'கேட்' ஆடும் கதக்களி...


இந்தக் கையை 'மிச்சம்' வெச்சது ஏன்'னு தெரியுதா?


ஏய்... எங்களுக்கும் கொஞ்சம் கொடு!



அடச்சே... செயற்கை மரம்!


யாராச்சும் பேப்பர் ரோஸ்ட்டுனு சாப்ட்ருவாங்களோ?

கோகுலம் சிறுவர் சங்கம் பட்டியல்

இந்த மாதமும் பட்டியல் தொடர்கிறது. இவர்களின் புகைப்படங்கள் இரண்டாவது, மூன்றாவது அட்டைகளில்!

1301. செ.தமிழ்ச்செல்வன், எட்டாம் வகுப்பு, புன்னமை தியாகராய வன்னியர் சங்க உயர்நிலைப் பள்ளி, காரணை
1302. ஐ.எஸ்தர் ஜெனியா, ஒன்பதாம் வகுப்பு, இம்மானுவேல் மெட்ரிக் மேனிலைப்பள்ளி, தென்காசி
1303. கே.ஜெயகாந்த், ஒன்பதாம் வகுப்பு, சி.ஹெச்.ஐ. உ.நி. பள்ளி, கொடுங்கையூர்.
1304. தி.காயத்ரி, எட்டாம் வகுப்பு, நா.க.ப. அரசு மேனிலைப்பள்ளி புதூர்.
1305. டி.ஜனார்த்தனன், ஒன்பதாம் வகுப்பு, அரசினர் மேனிலைப்பள்ளி, காஞ்சிபுரம்
1306. ம.ராஷ்மி, ஏழாம் வகுப்பு, விவேகானந்த கேந்திர வித்யாலயா, கன்னியாகுமரி.
1307. மு.விஜய், கிருஷ்ணசாமி நினைவு மெட்ரிக் மேனிலைப்பள்ளி, கடலூர்.
1308. ஜே.மகாலட்சுமி, ஆறாம் வகுப்பு, சாரதா மெட்ரிக் மேனிலைப்பள்ளி, செஞ்சி
1309. சி.காவ்யா, ஆறாம் வகுப்பு, பாரதியார் மெட்ரிக் மேனிலைப்பள்ளி, கூடுவாஞ்சேரி
1310. எஸ்.காவ்யா, ஐந்தாம் வகுப்பு, செயின்ட் ஜோசப் ஆங்கிலோ இந்தியன் பெண்கள் மேனிலைப்பள்ளி, திருச்சி.
1311. ம.நவீன், ஏழாம் வகுப்பு, ஸ்ரீ வெங்கடேஸ்வரா மெட்ரிக் மேனிலைப்பள்ளி, தஞ்சை.
1312. அ.பெலிக்ஸ், ஆறாம் வகுப்பு, குளூனி மெட்ரிக் மேனிலைப்பள்ளி, திருவண்ணாமலை.
1313. எம்.எஸ்.சிவநேஷ், ஹோலி எஞ்சல்ஸ் பதின்ம மேனிலைப்பள்ளி, மேட்டுப்பாளையம்
1314. எம்.எஸ்.அகிலேஷ், இரண்டாம் வகுப்பு, ஹோலி எஞ்சல்ஸ் பதின்ம மேனிலைப்பள்ளி, மேட்டுப்பாளையம்



1315. த.சிவானந்தம், ஒன்பதாம் வகுப்பு, காமராஜ் மேனிலைப்பள்ளி, கோபி.
1316. செ.தினேஷ்குமார், பத்தாம் வகுப்பு, அரசு ஆண்கள் மேனிலைப்பள்ளி, குளித்தலை.
1317. பா.சௌந்தர்யா, ஆறாம் வகுப்பு, குருஞான சம்பந்தர் மெட்ரிக் மேனிலைப்பள்ளி, மயிலாடுதுறை
1318. பொ.மகுடீஸ்வரி, பன்னிரண்டாம் வகுப்பு, நா.க.ப. அரசு மகளிர் மேனிலைப்பள்ளி, தேவனூர் புதூர்.
1319. எல்.ஸ்ரீதேவி, பதினொராம் வகுப்பு, அரசு மகளிர் மேனிலைப்பள்ளி, குப்பம்.
1320. ச.சிவராமன், ஆறாம் வகுப்பு, ஆர்.வி.எஸ். மெட்ரிக் மேனிலைப்பள்ளி, ரெட்டியாரூர்.



1321. ஐ.ர.சங்கரேஸ்வரி, ஒன்பதாம் வகுப்பு, தூய இக்னேசியார் அரசு மேனிலைப்பள்ளி, பாளையங்கோட்டை.

1322. மேரி ஜீனோ.எஸ், பத்தாம் வகுப்பு, அரசு மேனிலைப்பள்ளி, பாலக்கோடு

1323. ஐ.டி.வெங்கட்ராமன், ஆறாம் வகுப்பு, அவர் ஓன் மாடர்ன் மெட்ரிக் மேனிலைப் பள்ளி, திருநெல்வேலி

1324. வி.சுப்புலட்சுமி, பன்னிரண்டாம் வகுப்பு, பெண்கள் மேனிலைப்பள்ளி, காஞ்சிபுரம்.

1325. கே.ரெங்கசாமி, ஐந்தாம் வகுப்பு, இந்திரா ஆங்கிலப்பள்ளி, பணகுடி

1326. ச.அருணாசலம், ஆறாம் வகுப்பு, ரோஸ்மேரி மெட்ரிக் மேனிலைப்பள்ளி, திருநெல்வேலி

1327. த.தீபிகா, இரண்டாம் வகுப்பு, குறிஞ்சி மேனிலைப்பள்ளி, சின்னசேலம்.

1328. த.கௌசல்யா, எட்டாம் வகுப்பு, குறிஞ்சி மேனிலைப்பள்ளி, சின்னசேலம்.

1329. ஜி.காயத்ரி, ஆறாம் வகுப்பு, ஸ்ரீ ஆனந்த் ஜெயின் வித்யாலயா மெட்ரிக் மேனிலைப்பள்ளி, சென்னை.

1330. எஸ்.பி.வைஷாலி, ஐந்தாம் வகுப்பு, புனித தெரசா மெட்ரிக் பள்ளி, கரூர்.

1331. க.அருண்பிரசாத், எட்டாம் வகுப்பு, ஸ்ரீ வாசவி மெட்ரிக், திண்டுக்கல்.

1332. வி.ராஜேஷ், பதினொன்றாம் வகுப்பு, வி.எஸ். ஆண்கள் மேனிலைப்பள்ளி, திருவாரூர்.

1333. மு.பிரவின்குமார், பன்னிரண்டாம் வகுப்பு, கம்பன் அரசு மேனிலைப்பள்ளி, நெட்டப்பாக்கம்.

1334. பி.வி.ரிச்சர்ட், ஆறாம் வகுப்பு, குருஞான சம்பந்தர் மெட்ரிக் பள்ளி, வைத்தீஸ்வரன்கோயில்.

1335. எம்.வி.கௌசிக் தர்ஸன், மூன்றாம் வகுப்பு, தொன்போஸ்கா மெட்ரிக் பள்ளி, பரமக்குடி.

1336. எம்.வி.தீபக் தர்ஸன், ஆறாம் வகுப்பு, தொன்போஸ்கா மெட்ரிக் பள்ளி, பரமக்குடி

1337. அ.சத்தியசீலன், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, நாமக்கல்.

1338. பா.சந்தியா, மூன்றாம் வகுப்பு, கிருஷ்ணசாமி நினைவு மெட்ரிக் மேனிலைப்பள்ளி, கடலூர்.

1339. இரா.ஷாலினி, இரண்டாம் வகுப்பு, ஸ்ரீராமகிருஷ்ணா நர்சரி பள்ளி, துறையூர்.

1340. சி.குணசேகரன், பதினொன்றாம் வகுப்பு, அரசு மே.நி. பள்ளி, தஞ்சாவூர்.

1341. எஸ்.சரத், நான்காம் வகுப்பு, ஏ.வி.பி. மெட்ரிக் மேனிலைப்பள்ளி, கோவை.

1342. நா.ஸ்ரீவர்ஷிணி, ஏழாம் வகுப்பு, பி.கே.என். பெண்கள் மேனிலைப்பள்ளி, திருமங்கலம்

1343. ஏ.பி.பிரகாஷ், பத்தாம் வகுப்பு,ஆர்.சி. உயர்நிலைப் பள்ளி, விருதுநகர்.

கோகுலம் சிறுவர் சங்கம் - கூப்பன்

என் பெயர் : ....

வயது : ....

பெற்றோர் பெயர் : ....

வகுப்பு, பள்ளி : ....

புகைப்படம்

: ....

வீட்டு முகவரி : ....

....


....

நான் கோகுலம் சிறுவர் சங்கத்தின் உறுப்பினராகச் சேர விரும்புகிறேன். உங்கள் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்கிறேன்.

(கையொப்பம்)

இதுவரை கோகுலம் சிறுவர் சங்கத்துக்கு கூப்பன் அனுப்பாதவர்கள் உடனே அனுப்புங்கள். உங்கள் நண்பர்களுக்கும் விஷயத்தைச் சொல்லி, அவர்களையும் உறுப்பினராக்குங்கள்!

1344. பி.வி.கிருஷ்ணவேணி, ஏழாம் வகுப்பு, சாந்திநிகேதன் மெட்ரிகுலேஷன் பள்ளி, தேனி



1345.ம.ம.நிலவரசி, ஆறாம் வகுப்பு, புனித இசபெல் பெண்கள் மேனிலைப்பள்ளி, பட்டுக்கோட்டை

1346.ம.அக்ஷயா, மூன்றாம் வகுப்பு, ஜெயம் வித்யாலயா மெட்ரிக் பள்ளி, அரூர்.

1347.எம்.மகேஷ்குமார், வேங்கம்மையார் நகராட்சி உயர்நிலைப் பள்ளி, கோபி.

1348.பி.அஸ்வின், ஐந்தாம் வகுப்பு, ஸ்ரீ மாதா மெட்ரிக் பள்ளி, கும்பகோணம்.

1349.தேனமுதம், எட்டாம் வகுப்பு, இடை நிலைப்பள்ளி, பூச்சோங், மலேசியா.

1350.எம்.கார்த்திக், பத்தாம் வகுப்பு, அரசு ஆண்கள் மேனிலைப்பள்ளி, திருவாரூர்.

அந்த ஊரின் பெயர் ஜாலபுரி! அங்கே ராமு, சோமு என்ற நண்பர்கள் இருந்தனர். பரம ஏழைகளான அவர்கள் வேலை தேடிக் கிளம்பினர். அடர்ந்த காட்டு வழியே நெடுந்தூரம் நடந்த பின் ஒரு மரத்தடியில் இளைப்பாறினர்.

அப்போது அவர்கள் முன் ஒரு சித்திரக்குள்ளன் தோன்றினான். "நண்பர்களே! நல்லவர்களான உங்களுக்கு இரு அற்புதப் பரிசுகளைத் தருகிறேன்" என்று சொல்லி, நினைத்த இடத்துக்கு அழைத்து செல்லும் மந்திரப்போர்வை தங்கக் காசுகள் கொட்டும் ஒரு சுருக்குப் பை ஆகியவற்றைத் தந்தான்.

"இவற்றை வைத்து நீங்கள் சுபிட்ச

ஜாலபுரி குள்ளன்!



எஸ். விஜயலட்சுமி

மாக வாழுங்கள். ஆனால், தினமும் ஏழைகளுக்கு உதவி செய்ய வேண்டும். தவறினால் விபரீதங்கள் நேரும்'' என்று எச்சரித்துவிட்டு மறைந்து போனான்.

இருவரும் மந்திரப் போர்வையை போர்த்திக் கொண்டனர். பக்கத்து நாட்டிற்குச் செல்ல வேண்டும் என்று நினைத்தனர். மறுவிநாடி அங்கே இருந்தனர். மந்திரப்பையின் மூலம் தங்கக் காசுகள் வரவழைத்து விரும்பியதெல்லாம் உண்டனர். புது ஆடைகள் உடுத்தி மகிழ்ந்தனர். தவிர, அந்த நாட்டிலிருந்த ஏழைகளுக்கு உதவ முற்பட்டனர். தினமும் அவர்களைத் தேடி நிறைய ஏழைகள் வந்து உதவி பெற்றுச் சென்றனர். இந்த விஷயம் அந்த நாட்டின் ராஜாவுக்கு எட்டியது.


இருவரையும் அரண்மனைக்கு அழைத்து விருந்து வைத்தான் அரசன். பிறகு, 'உங்கள் சுருக்குப் பையைத் தாருங்கள். பார்த்து விட்டுத் தருகிறேன்' என்று பையை வாங்கினான். ஆனால், திருப்பித் தரும்போது வேறு ஒரு சாதாரணப் பையைக் கொடுத்தான். அதையறியாமல் இருவரும் விடை பெற்றுக் கிளம்பினர்.

நாடோடிக் கதை.

சற்று நேரத்தில் அது போலி சுருக்குப் பை என அறிந்த ராமு கோபமானான். 'இரு. நான் போய் நம்முடைய சுருக்குப் பையை எடுத்து வருகிறேன்' என்று கிளம்பினான். மந்திரப் போர்வையின் உதவியுடன் அரசனின் அறையை அடைந்தான். சுருக்குப்பை ராஜாவின் கையிலிருந்தது; அவன்முன் தங்கக் காசுகள் மலைபோலக் குவிந்து கிடந்தன.

திடீரென்று ராமுவைப் பார்த்த

சுருக்குப்பை ராஜாவின் கையிலிருந்தது; அவன்முன் தங்கக்கசுகள் மலைபோல குவிந்து கிடந்தன.



அரசன், 'யாரங்கே' என்று கூவினான். மறுகணம் அறைக்குள், மெய்க்காப் பாளர்கள் ஓடி வந்தனர். குழப்பத்தில், மந்திரப் போர்வை இருப்பதையே மறந்த ராமு, ஜன்னல் வழியே வெளியே குதித்தான். மந்திரப் போர்வை ஜன்னல் கம்பியில் சிக்கிக் கொண்டது; ராமு தப்பி ஓடினான். அரசன் அந்தப் போர் வையை எடுத்துக் கொண்டான். அதைப் போர்த்திக் கொண்டு, விரும்பிய இடங் களுக்கெல்லாம் சென்றான். நள்ளிரவில் அரண்மனைக்குத் திரும்பி களைப்புடன் உறங்கினான்.



"மந்திரப்பொருட்களை என் நண்பர்களிடம் திருப்பிக்கொடுங்கள். அப்போதுதான், என் வைத்தியம் பலிக்கும்" என்றான் சித்திரக்குள்ளன்.

மறுநாள் காலையில் கண் விழித்த ராஜா தன் முகத்தில் ஏதோ மாறுதல் ஏற்படுவதை உணர்ந்தான். அவனது மூக்கு நீாளமாக வளர ஆரம் பித்தது. அதிர்ச்சியடைந்தான் அர சன். அரண்மனை வைத்தியர்களை வரவழைத்தான். அவர்கள் ஏதோ மூலிகைகளைக் கசக்கித் தேய்த்தனர். ஆனால் ஒன்றும் பலன் தரவில்லை. அதேசமயம், சுருக்குப்பையின் மூலம் வரவழைத்த தங்கக் காசுகளும் மாயமாய் மறைந்தன.

இதற்கிடையே, மந்திரப் பொருட்கள் கைவிட்டுப் போனதால் கலங்கிய ராமுவும், சோமுவும் மீண்டும் காட்டுக் குச் சென்றனர். சித்திரக்குள்ளனைச் சந்தித்து, நடந்ததைக் கூறினர். "கவ லைப்படாதீர்கள். என்னுடன் வாருங் கள்" என்று அவர்களை அழைத்துக் கொண்டு அரண்மனைக்குச் சென்றான் குள்ளன்.

"அரசே! நான் உங்களுடைய மூக் கைப் பழைய நிலைக்கு மாற்றுகிறேன். ஆனால் ஒரு நிபந்தனை. மந்திரப் பொருட்களை என் நண்பர்களிடம் நீங்கள் திருப்பிக் கொடுக்க வேண்டும். அப்போதுதான் என் வைத்தியம் பலிக்கும்" என் றான் மன்னனிடம். மன்னனும் ஒப்புக்கொண்டு, குள்ளன் சொன்னபடியே செய்தான்.

"இதோ! இந்த ஆப்பிளை சாப்பிடுங்கள்" என்று குள்ளன் கொடுத்த பழத்தை வாங்கி உண்டார் ராஜா. என்ன ஆச்சரியம்! அவரது நீ...ள மூக்கு சுருங்கி பழையபடி மாறி யது. சித்திரக் குள்ளனுக்கு நன்றி கூறிய நண்பர்கள் இருவரும், தினமும் பல ஊர்களுக்குச் சென்று நிறைய ஏழைகளுக்கு உதவ, அவர்களும் மகிழ்ச்சியுடன் வாழ்ந்தனர். ●

வரலாறு

கண்டுபிடிப்புகளின் நூற்றாண்டு!

கௌதம்ராம்

இந்த இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே கண்டுபிடிக்கப்பட்ட ஒரு சாதனம் ரேடியோ. 1901ல் மார்கோனி, ரேடியோ அலைகள் மூலமாக இங்கிலாந்திலிருந்து கனடாவுக்குத் தகவல் அனுப்பியது தகவல் தொடர்புத் துறையில் ஒரு மாபெரும் புரட்சி. அதன் பிறகு ரேடியோவில் ஏ.எம். என்று சொல்லப்படும் 'ஆம்ப்ளிஃபைடு மாடுலேஷன்' என்ற முறை அறிமுகமானது. இன்று ஏ.எம். மட்டுமில்லாமல் மத்திய அலை (மீடியம் வேவ்) சிற்றலை (ஷார்ட் வேவ்) மற்றும் எஃப்.எம் என்ற பண்பலை என்று பலவிதமான அலைவரிசைகளில் ரேடியோ ஒலிபரப்பு சாத்தியமாகி இருக்கிறது. தொலைக்காட்சி வந்துவிட்டது என்றாலும், ரேடியோவுக்கு மவுசு குறைந்துவிடவில்லை. என்பதற்கு நாடெங்கும் ஒலிபரப்பாகிக் கொண்டிருக்கும் சூரியன்களும், மிர்ச்சிகளுமே சாட்சி!

● இரவையும் பகல் போல வெளிச்சமாக்கும் மின்சார பல்புகளை இன்று பயன்படுத்துகிறோம். சுவிட்சைப் போட்டால் வீட்டில் மின் விசிறி சுழலுகிறது; சமையல் அறையில் கிரைண்டர் மாவு அரைகிறது. ரயில்கள் மின்சாரத்தில் இயங்குகின்றன. தொழிற்சாலைகள் பல பொருட்களை உற்பத்தி செய்கின்றன. மின்சாரம் இல்லாத உலகத்தை நம்மால் கற்பனை கூட செய்து பார்க்க இயலாது. மின்சாரம் கடந்த நூற்றாண்டின் மிக முக்கியமான ஒரு கண்டுபிடிப்பு.

● பறவைகள் மாதிரி மனிதன், பறக்க முடியுமா? என்று கனவை நனவாக்கும் முயற்சியில் இறங்கியவர்கள் ரைட் சகோதரர்களான, வில்பர் ரைட், ஆர்வில் ரைட். முதல் முயற்சி, வெற்றி பெறாமல் போனாலும் கூட, அது இன்னும் சிலரை ஆராய்ச்சி செய்யத் தூண்டியது. தன்னந்தனியாக சார்லஸ் லின்ஸ்பர்க் என்பவர் அட்லாண்டிக் கடல் மீது பறந்தது வான் பயண வரலாற்றில் ஒரு மைல் கல். இன்று பிரம்மாண்டமான ஆகாய விமானங்கள் பறந்துகொண்டிருக்கின்றன. ஒலியின் வேகத்தை மிஞ்சும் கான்கார்டு விமானங்களும், ஜெட் விமானங்களும்













நாள்தோறும் லட்சக்கணக்கான பயணிகளை உலகெங்கும் சீக்கிரமாகவும் சௌகரியமாகவும் கொண்டுபோய் சேர்க்கின்றன.

● சார்லஸ் பாபேஜ் என்பவர் போட்ட பிள்ளையார் சுழிதான் இன்று பல விஞ்ஞானிகள், கணித வல்லுனர்களின் இடைவிடாத ஆராய்ச்சியின் மூலமாக கம்ப்யூட்டராக உருமாறி, உலகம் முழுமையிலும் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறது. ஆரம்ப காலத்தில் கம்ப்யூட்டர் என்பது ஒரு ராட்சச கால்குலேட்டராகத்தான் கருதப்பட்டது. ஆனால் இன்று மொபைல் போனுக்குள்ளேயே கம்ப்யூட்டர் சுருங்கி உட்கார்ந்துகொண்டுவிட்டது!

● டெலிபோன் கண்டுபிடிப்பு, தகவல் தொடர்புத் துறையில் ஒரு திருப்புமுனைதான். ஆனால், மொபைல் போன் ஒரு அதிரடியான புரட்சி. மொபைல்போன் வந்துவிட்ட பிறகு உலகத்தின் எந்த மூலையானாலும் கூப்பிடு தூரம்தான். உலகின் மிகப் பெரிய மொபைல் போன் விற்பனைக் களமாக இந்தியா விளங்குகிறது. மொபைல் போன் மூலம் தொடர்பு கொள்ள வசதி வந்துவிட்ட பிறகு, மக்கள் மத்தியில் கடிதம் எழுதும் பழக்கம் வெகுவாகக் குறைந்துவிட்டதாகச் சொல்கிறார்கள்!

● மனிதனால் செய்யப்பட்ட வேலைகளையும், அவனால் செய்ய முடியாத வேலைகளையும்கூட இன்று ரோபோ என்னும் மனித எந்திரங்கள் செய்து கொண்டிருக்கின்றன. அதிக வெப்பம், மிகுந்த உயரம், ஆபத்தான ரசாயனப் பொருட்களைப் பயன்படுத்தும் பகுதிகள் போன்றவற்றில் பணியாற்றும்போது ஏற்படும் ஆபத்துக்களைத் தவிர்த்து, அந்த வேலைகளைச் செய்ய இன்று உலகமெங்கும் ரோபோக்கள் பயன்படுத்தப்படுகின்றன.

● மனிதன் நிலவில் காலடி வைத்தது அறுபதுகளில் மாபெரும் சாதனையாகக் கருதப்பட்டது. ஆனால் அதற்கு முன்பாகவே ஆளில்லாத ராக்கெட்களை

அமெரிக்கா, ருஷ்யா போன்ற முன்னேறிய நாடுகள் விண்வெளிக்கு அனுப்பி சோதனை செய்தன. இன்று மற்ற கிரகங்களுக்கு விண்கலங்கள் அனுப்பி வைக்கப்பட்டு, ஆராய்ச்சிகள் தொடர்ந்து நடந்துகொண்டிருக்கின்றன. இவை அனைத்துக்குமே ஆதாரமான ஒன்று அந்த விண்கலங்களை வான்வெளிக்கு அனுப்பி வைக்கும் பெரும் சவாலை தீர்த்து வைக்கும் ராக்கெட்கள்தான். திரவ எரிபொருளைப் பயன்படுத்தி இயங்கும் ராக்கெட் 1914ல் கண்டுபிடிக்கப்பட்டது. திட எரிபொருளுக்கு பதிலாக எளியமுறையில் திரவ எரிபொருளைப் பயன்படுத்தி ராக்கெட் அனுப்பும் தொழில் நுட்பம் இன்று பெரும் வளர்ச்சி கண்டுள்ளது.


● மருத்துவத் துறையில் கண்டு பிடிக்கப்பட்டவற்றுள் மிகவும் முக்கியமானது 'ஆண்டிபயாடிக்'. குறிப்பாக 1928ல் கண்டுபிடிக்கப்பட்ட பென்சிலின். இதனைக் கண்டுபிடித்தவர் ஸ்காட்லாந்தைச் சேர்ந்த உயிரியல் வல்லுனரான 'அலெக்சாண்டர் ஃப்ளெமிங்'. இன்று நோயாளிகளுக்கு ஆண்டிபயாட்டிக் மருந்துகளைக் கொடுத்து சிகிச்சை அளிக்காத மருத்துவர்களே இல்லை என்று சொல்லும்படி அவை சர்வ உலகத்திலும் வியாபித்துள்ளன. போலியோ தடுப்பு மருந்து கண்டுபிடிக்கப்பட்டது மருத்துவ உலகிற்கு வரப்பிரசாதம். இன்று போலியோ தடுப்பு மருந்தை குழந்தைகளுக்கு அளித்து, அந்நோயிலிருந்து காப்பாற்றி வருவது ஆறுதலான விஷயம். மேலும் உலகின் அதிகமான எண்ணிக்கையில் ஆண்களையும், பெண்களையும் பாதிக்கும் ஒரு நோய் கான்ஸர். இன்று கான்ஸர் நோயாளிகளுக்கு 'கீமோதெரபி' என்ற சிகிச்சை அளிக்கப்படுகிறது. லேசர் கதிர்களைப் பயன்படுத்தி சிகிச்சை பலவகையான அறுவை சிகிச்சைகள் செய்யப்படுகின்றன. இவை அனைத்தும் மருத்துவத்துறையின் மாபெரும் கண்டுபிடிப்புகள்.

மொத்தத்தில், இருபதாம் நூற்றாண்டை 'கண்டுபிடிப்புகளின் நூற்றாண்டு' எனச் சொல்லலாம். ●









யாருக்குப் பசி?!

கதை: உ.ரியாஷ் கீழக்கரை
படம்: பிள்ளை





இருவருமே சிரிக்கிறார்கள். ஏதோ விஷயம் இருக்கிறது.
எனக்கொரு சந்தேகம் அரசே!
என்ன சந்தேகம்?
யாருக்கு பசி அதிகம் என்றுதான்!
அரசிக்குத்தான். ஒரு பழம்கூட இல்லையே...
உண்மைதான். ஆனால்...
ஆனால்?
உங்கள் இலையில் ஒரு தோல்கூட இல்லாமல், சாப்பிட்டு விட்டீர்களே...
ஹா... ஹா...
என் இலையிலிருந்தும் எடுக்காமல் போனாரே!
பலே பீர்பால் பலே... மதியூகத்தில் உம்மை வெல்ல முடியாது.
அதிலென்ன சந்தேகம்!

மழைக் கால

டாக்டர் கு.கணேசன்

மழைக்காலம் வந்து விட்டால் போதும், தொற்றுநோய்களுக்குக் கொண்டாட்டம்தான். தமிழ்நாட்டில் நகர மென்றாலும் சரி; கிராமம் என்றாலும் சரி; தெருச் சுத்தமும், பாதை சீரமைப்பும், சாலை பராமரிப்பும் சரியில்லாத காரணத்தால், தண்ணீர் வடிய வழியில்லாமல் போகிறது. தெரு வெல்லாம் குளங்கள்! இதனால் சுற்றுப்புறம் மாசடைந்து, குடிநீரும் தெருநீரும் கலந்து நோய்க்கிருமிகளுக்கு வாழ்விடம் தந்துவிடுகின்றன. விளைவு, வைரஸ் காய்ச்சல், வயிற்றுப்போக்கு, காலரா என்று பல தொற்றுநோய்கள் படையெடுக்கத் தொடங்கிவிடும்.

வைரஸ் காய்ச்சல்

இந்நோய்க் கிருமிகள் நோயாளி தும்மும்போது, இருமும்போது, மூக்கைச் சிந்தும்போது சளியோடு வெளியேறி, அருகில் இருப்பவர்களுக்குப் பரவி விடும். காய்ச்சல், தலைவலி, உடல்வலி, கைகால்வலி கடுமையாக இருக்கும். தும்மல், மூக்கு ஒழுகல், சளி, இருமல் தொல்லை கொடுக்கும். வைரஸ் காய்ச்சலுக்குச் சிறப்புச் சிகிச்சை எதுவும் இல்லை. காய்ச்சலைக் குறைக்க 'பாரா சிட்டமால்' மாத்திரை உதவும். தும்மல், மூக்கு ஒழுகல், இருமல் தொல்லைகளைக் கட்டுப்படுத்த 'ஹிஸ்டமின் எதிர்ப்பு மருந்துகள்' பலனளிக்கும்.

குழந்தைகளுக்கு வைரஸ் காய்ச்சல் வந்தால், காற்றோட்டமான அறையில் படுக்க வைக்கவேண்டும். பள்ளிக்கு அனுப்பாமல் தேவையான அளவுக்கு ஓய்வு எடுக்கச் சொல்ல வேண்டும். திரவ உணவுகளை அடிக்கடி தரவேண்டும். சுத்தமான குடிநீரைத் தரவேண்டியது முக்கியம். காய்ச்சல் அதிகமாக இருந்தால் சாதாரண தண்ணீரில் சுத்தமான துண்டை நனைத்துப் பிழிந்து குழந்தையின் உடல் முழுவதும் விரிக்கவேண்டும். இக்காய்ச்சலைத் தடுக்கத் தடுப்பூசி உள்ளது. இரண்டுவார இடைவெளியில் இரண்டு ஊசி போட்டுக் கொள்ள வேண்டும்.



வயிற்றுப்போக்கு மற்றும் காலரா

பாக்டீரியாவும்



'ரோட்டா' வைரஸ் கிருமிகளும் மாசடைந்த குடிநீர் மற்றும் உணவு மூலம் பரவுவதால் வயிற்றுப்போக்கு ஏற்படுகிறது. ஈக்கள் இக்கிருமிகள் பரவ உதவுகின்றன. இந்த நோய்களால் நோயாளியின் உடலில் நீர் வற்றிப் போக வாய்ப்பு இருக்கிறது. இதனைச் சரிசெய்வதே சிகிச்சையின் முக்கிய நோக்கம். இதற்குக் குடிநீரில் சிறிதளவு உப்பையும் சர்க்கரையையும் கலந்து அடிக்கடி குடிக்க வேண்டும் அல்லது 'எலெக்ட்ரால்' பவுடரைத் தண்ணீரில் கலந்து குடிக்கலாம்.

வயிற்றுப்போக்கைத் தடுக்க, சாப் பிடும் முன்பும் பின்பும் கைகளை நன்றாக சோப்பு போட்டுக் கழுவ வேண்டும். தெருக்களில் மலம் கழிப்ப தைத் தவிர்க்க வேண்டும். தண்ணீரை குறைந்தது பத்து நிமிடம் கொதிக்க வைத்து, ஆறவைத்துக் குடிப்பது நல்லது. குடிநீர்ப் பாத்திரங்களையும், சமைத்த உணவுகளையும் ஈக்கள் மொய்க்காமல் மூடி வைக்க வேண்டும். காலராவுக்குத் தடுப்பூசி போட்டுக் கொள்ள வேண்டும்.

நோய்கள்!

சீதபேதி

அமீபா, சிகெல்லா, ஜியார்டியா போன்ற கிருமிகள் பாதிக்கும்போது சீதபேதி வரும். குளம் மற்றும் ஆற்றங் கரை ஓரங்களிலும் தெருக்களிலும், மலம் கழிக்கும்போது மலத்தில் வெளியாகும் இக்கிருமிகளின் முட்டைகள், மழைக் காலத்தில் சாக்கடைநீர் மற்றும் குடிநீரில் கலந்து நம்மைத் தொற்றிவிடும். இவை நம் குடலை அடைந்ததும் கிருமி யாக வளரும். அப்போது சீதபேதி ஏற்படும். காய்ச்சல், அடிவயிற்றுவலி, வாந்தி, வயிற்றுப் போக்கு, மலத்தில் சீதமும் ரத்தமும் கலந்து போவது போன்ற அறிகுறிகள் உண்டாகும். மருத் துவரின் ஆலோசனைப்படி சிகிச்சை பெறவேண்டும். சீதபேதியைத் தடுக்க சுயத்தூய்மை, சுற்றுப்புறத்தூய்மை, குடி நீர்த்தூய்மை மற்றும் உணவுத்தூய்மை மிக அவசியம்.

சென்னைக் கண்நோய்

'அடினோ வைரஸ்' கிருமிகளின் தாக்குதலால் இந்நோய் வருகிறது. மழைக்கால ஆரம்பத்தில் ஆண்டு தோறும் இது தோன்றுவது வழக்கம். அடுத்தவர்களுக்கு மிக எளிதாக பரவக்

கூடியது. கண் சிவந்து கண்ணீர்வடிதல், எரிச்சல், வலி, வீக்கம் ஆகியவை இதன் அறிகுறிகள். இதற்குச் சொட்டு மருந்துகள் பல உள்ளன. மருத்துவர் யோசனைப்படி கண் சொட்டுமருந்தைத் தேர்வு செய்ய வேண்டும்.

இந்நோய் வராமல் தவிர்க்க, கண் நோய் உள்ளவர், வீட்டில் உள்ள மற்றவர்களிடமிருந்து தள்ளியே இருப்பது நல்லது. கண்ணை அடிக் கடி கசக்கக் கூடாது. கைகளை அவ் வப்போது சோப்பு போட்டுக் கழுவ வேண்டும். நோயுள்ளவர் பயன்படுத் திய கைக்குட்டை, துண்டு, சோப்பு, தலையணை, பற்பசை போன்றவற்றை மற்றவர்கள் பயன்படுத்தக்கூடாது.

மஞ்சள்காமாலை

அசுத்தமான குடிநீர் மற்றும் உணவு மூலம் 'ஹெப்படைட்டிஸ்-ஏ' வைரஸ் கிருமிகள் நம்மைத் தாக்கும்போது மஞ்சள்காமாலை வரும். காய்ச்சல், குளிர் நடுக்கம், வயிற்றுவலி, வாந்தி, பசியின்மை, சிறுநீர் மஞ்சள் நிறத்தில் போவது, கண்கள் மஞ்சள் நிறத்தில் காணப்படுவது போன்றவை இதன் அறிகுறிகள். சுத்தமான குடிநீரைப் பருகுவது, மாவுச்சத்துள்ள உணவுகளை அதிகமாக உண்பது, எண்ணெய் மற்றும் கொழுப்பு உணவுகளைத் தவிர்ப்பது, முழுமையான ஓய்வு ஆகியவை இந்நோயைக் குணப்படுத்த உதவுகின்றன. இந்நோய்க்குத் தடுப்பூசி உள்ளது. குழந்தைக்கு ஒரு வயது முடிந்ததும் ஒரு முறை, அடுத்து ஓராண்டு கழித்து ஒரு முறை என இரண்டு முறை இத்தடுப்பூசியைப் போட்டுக் கொண்டால் வாழ்நாள் முழுவதும் இந்நோய் வராது.



வாழ்த்துகள்!


விடையைச் சொல்; பரிசை வெல் - 27ல் கலந்து கொண்டு சரியான விடைகளை நூற்றுக்கணக்கானோர் அனுப்பி இருந்தனர். ஆகவே, பரிசுத் தொகையான ஆயிரம் ரூபாயை குலுக்கல் மூலம் பத்து பேருக்கு, தலா ரூ.100/- வீதம் வழங்குகிறோம்.

சரியான விடைகள் :

1.எர்னோருபிகி, 2.தாமஸ் ஆல்வா எடிசன், 3.அலங்காநல்லூர், 4.ஹோபா, 5.56 கி.மீ.

பரிசு பெறுவோர் :

1.எஸ்.ஹரிஷ், திருச்சி, 2.எஸ்.கவிமணி, நீலகிரி, 3.ச.வசந்த், செங்கோட்டை, 4.கி.அகிலா, வேலூர், 5.எஸ்.மேரி ஜூனோ, பாலக்காடு, 6.மு.முகமது அமீர், உளுந்தூர் பேட்டை, 7. நா.முத்துக்குமார், கரூர், 8. ஜா.ரெனால்ட் பர்னாந்து, ஆலந்தலை, 9.கே.பி.எஸ்.அகல்யா, வத்திராயிருப்பு, 10.சி.முகில்வண்ணன், காஞ்சிபுரம்




கடித மாலை

அழகான பாலம்!

✱ 'கல் வைத்த மோதிரம்' படக்கதை வெகு ஜோர்! படமும் கதையும் பற்கள் தெரிய சிரிக்கச் செய்தன. - **ஆர்.ஜி.ஜே. ஹரிதா, திருவொற்றியூர்** ✱ 'வரலாறு' பகுதியில் வெளிவந்திருக்கும் 'மனதில் நிற்கும் மாவீரர்கள்!' பற்றிய தகவல்கள் சிறப்பு! -**எஸ்.வினித்மாதவன், மதுரை** ✱ மு.அருண்குமாரின் கைவண்ணத்தில் உருவான 'வானவில்' சிறுகதை.. திறமைக்கும், தன்னம்பிக்கைக்கும் அழகான பாலம் அமைத்துத் தந்தது. - **உ.மதன்ராஜ், வீரன்வயல்** ✱ தீப ஒளித் திருநாள் வாழ்த்தாக... கோகூ மொழிந்துள்ள அற்புத வழி காட்டுதல்... இருளகற்றிடும் ஒளி அறிவுறுத்தல்கள் மத்தாப்பாய் மிளிர்கின்றன. - **ச.ஆ.கேசவன், இனாம் மணியாச்சி** ✱ 'நியூஸ் ரூம்' பகுதியின் மூலம் நிறைய புது விஷயங்களைத் தெரிந்து கொள்ள முடிகிறது. - **ஆர்.அம்பிகா, மதுரை** ✱ வெறுமனே மொழி வெறி கொள்வதைவிட, நம் மொழியின் மாறுபட்ட அழகை அர்த்தத்தை ரசிப்பது சாலச் சிறந்தது என்பதை பேசத் தெரியாத கிளி என்ற தமிழமுது... மனதில் பதிய வைத்தது. - **ஆர்.ஜி.காயத்ரி, திசையன்விளை** ✱ முதல் பரிசு பெற்ற வானவில் சிறுகதை, இயல்பான நடையில், இயற்கை நமக்குப் புலப்படாத பொக்கிஷங்களை புதைத்து வைத்துள்ளது என்கிற சீரிய கருத்தைச் சொல்லி, தனது தேர்வை நியாயப்படுத்தியது. - **ஆர்.ப்ரியதர்ஷினி, பூனாம்பாளையம்**

✱ டாக்டர் பக்கம் மூலமாகச் சாதாரண ஃப்ளு காய்ச்சலுக்கும், பன்றிக் காய்ச்சலுக்கும் உள்ள வித்தியாசத்தை அறிந்து கொள்ள முடிந்தது. -**பி.சர்வேஸ்வரன், மதுரை** ✱ கவிதைப் பூங்கா கற்கண்டும் தேங்காயும் கலந்த தேன்பா! அனைத்து கவிதைகளும் ரசிக்கச் செய்தன. - **எல்.ஹரிபாலசுப்ரமணியம், திருக்களூர்** ✱ தீபாவளி பற்றிய தலையங்கம் அருமை அதுவும் 'அசுரத் தன்மை - இருள்; அன்பு



நிலை - ஒளி' என்று, அன்பை முக்கியப்படுத்திச் சொல்லி இருப்பது பாராட்டத்தக்கது. - **ஆர்.பிருந்தா, மதுரை** ✱ மண் பானைக்குள் வெப்பம் செல்ல முடியாததனால் அதில் உள்ள நீர் குளிர்ச்சியாக இருக்கிறது என்றுதான் இவ்வளவு நாளும் நினைத்திருந்தேன். ஆனால், அதிலுள்ள நுண் துளைகளின் வழியாக வெப்பம் கசிந்து வெளியேறுவதனால், நீர் குளிர்கிறது என்பதைப் படித்து தெளிவு பெற்றேன். - **கே.எஸ். யோகேஷ்வரன், உ. எண் 146, திருச்சி**

விடையைச் சொல்; பரிசை வெல் - 29

1. சீன விண்வெளி வீரர்களை அழைக்கும் பெயர் ....

2. சென்னைக் கண்நோய் வரக் காரணமான வைரஸ் ....

3. துருக்கி நாட்டின் நாணயம் ....

4. பாரன்ஹீட் தெர்மாமீட்டரைக் கண்டுபிடித்தவர் .... நாட்டைச் சேர்ந்தவர்.

5. ஈஃபில் டவரின் மொத்த உயரம் ....

என் பெயர் : ....

வகுப்பு, பள்ளி : ....

....

வீட்டு முகவரி : ....

....

பின்கோடு ....

போட்டி



பரிசு ரூபாய் 1000/-

இங்கே ஐந்து கேள்விகள் கேட்கப்பட்டுள்ளன. விடைகளை நீங்கள் எங்கும் தேடிச் செல்ல வேண்டாம். இதே இதழில்தான் உள்ளன. அவற்றைக் கண்டுபிடித்து எழுதுங்கள். கூப்பனையும் பூர்த்திசெய்து இந்தப் பக்கத்தைக் கத்தரித்து அனுப்புங்கள். ஆசிரியர் தீர்ப்பே இறுதி.

முடிவு தேதி : 30.10.2009

அனுப்ப வேண்டிய முகவரி:
ஆசிரியர், கோகுலம், (பரிசுப் போட்டி)
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

கோகுலம் சிறுவர் சங்கம்

உறுப்பினர்கள்


1326

1327

1328

1329

1330

1331

1332

1333

1334

1335


1336

1337

1338


1339

1340

1341

1342

1343

1344

1345

1346

1347

1348

1349

1350

பயர் மற்றும் விவரங்கள் 65 ஆம் பக்கம்

Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN/CC(S)DN/109/09-11 • Licensed to post without prepayment under PMG's Licence No. WPP TN/CC(S)DN/47/09-11 • Registered as a Newspaper in Srilanka

